இளம்பிறை

எம். ஏ. ரஹ்மான்

எழுதிய

சிறுவர் இலக்கிய நூல்கள்

## இளமைப் பருவத்திலே!

13 உலகப் பெரியார்களின் இளமைப் பருவத்தில் நிகழ்ந்த சுவையான சம்பவங்களின் தொகுப்பு. படங்களுடனும் வெண்பாக்களுடனும் கூடியது.

விலை: ரூ 1-25

## காந்தி போதனை

காந்தி நேசித்த 13 பொருள்களின் சுய சரிதைகள். அவருடைய வாழ்க்கை பற்றிய 16 கதைகள். அவருடைய சர்வ சமய சமரச நோக்குப் பற்றிய விளக்கம். இவற்றுடன், அவரைப் பற்றிய பூரண வரலாறு. சித்திரங்களுடன் கூடியது.

விலை; ரூ 3-75

## இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலந்தொட்டு, மௌலானா அபுல் கலாம் ஆஸாத் வரையிலுமுள்ள இஸ்லாமிய வரலாற்றுப் பூங்காவிலே மலர்ந்த 40 அற்புத நிகழ்ச்சிகள் அடங்கிய கதைக் கோவை.

விலை: ரூ 1-90

Printed at Rainbow Printers, 231, Wolfendhal Street, Colombo-13

★ இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள் ★ அரசு வெளியீடு விலை: ரூ. 1-90 ★

# இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்

இளம்பிறை எம்.ஏ.ரஹ்மான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்லாமிய
# வரலாற்றுக்
# கதைகள்

ஏக விநியோகஸ்தர்கள்:

**வீரகேசரி**

த. பெ. எண்: 160,

கொழும்பு-14.

தொலைபேசி: 20881

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ISLAMIYA**
**VARALATRUK KATHAIKAL**

*— Stories from Islamic Tradition in Tamil*

Author.

*Ilampirai* M. A. Rahman

Printer:

Rainbow Printers
231, Wolfendhal Street,
Colombo 13.

Publisher:

**ARASU** *Publications*
231, Wolfendhal Street,
Colombo-13.

Date of Issue:

8th October, 1972

104 Pages

Crown 8 vo

First Edition - 2500 Copies

One Rupee & Ninety Cents

(C)

**ARASU** *Publications*

# இஸ்லாமிய

# வரலாற்றுக் கதைகள்

இளம்பிறை
எம். ஏ. ரஹ்மான்

அரசு வெளியீடு
231, ஆதிருப்பள்ளித்தெரு
கொழும்பு 13

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசு வெளியீடு: 34

முதற் பதிப்பு: 8, அக்டோபர் 1972

விலை: ரூ. 1-90

*Sole Distributors:*

**VIRAKESARI**

P. O. Box 160,

Colombo-14.

Phone: *20881*

அச்சாளர்:

**ரெயின்போ பிரிண்டர்ஸ்**

231, ஆதிருப்பள்ளித் தெரு,

கொழும்பு-13:

தொலைபேசி: 36067.

பூசுப் - பைசனம்பு
பெற்ற
ஏக மகளாம்
என்
அக்காள்
**ஷரீபா பீவி**
குடும்பத்
தலைவருக்கும்
கால்
நூற்றாண்டு
சிரத்தையுடன்
குறையும்
கறையும்
மருவாது
தவ
வழியிற்
பணி
இயற்றி
இறையில்ல
மேகிய
அந்த
இனியளுக்கு
என்
விழிகளிலே
கண்ணீர்க்
கங்கை
தேக்கி
**இந் நூல்**
ஓர்
அன்புப்
**படையல்**



என்
அக்காளுக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

புகழனைத்தும் இறைக்கே!

சிறுவர் இலக்கியத் துறையிலே எனக்கு எப்பொழுதும் மிகுந்த ஈடுபாடு உண்டு. ஈழத் தமிழ் இலக்கியத்திலே, எழுத்தாளரின் அசிரத்தைக்கும் புறக்கணிப்புக்கும் உள்ளாகியுள்ள துறை சிறுவர் இலக்கியமாகும். அந்தக் குறையை நிரவுதல் செய்யும் வகையில் 'இளமைப் பருவத்திலே!' என்னும் என்னுடைய முதலாவது சிறுவர் இலக்கிய நூல் பத்து ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்தது. அதன் இரண்டாவது பதிப்பும் விற்பனையாகிவிட்டது என்பதுடன், அது நூல் நிலையத்திற்குரிய புத்தகமாக உபயோகிப்பதற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அந்நூலைத் தொடர்ந்து, 'காந்தி போதனை' என்னுஞ் சிறுவர் இலக்கிய நூலை எழுதி வெளியிட்டேன். அதற்கும் சுவைஞர் மத்தியிலே மகத்தான வரவேற்புக் கிட்டியது. சிறுவர் இலக்கியத்துறையிலே என் மூன்றாவது பங்களிப்பாக 'இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்' இப்பொழுது வெளிவருகின்றது. இந்நூலை மாணாக்கருக்கும் இளைஞருக்கும் பயன்படும் விதத்திலும் முஸ்லிம் அல்லாதாரும் வாசித்தின்புறும் வகையிலும் வகுத்துள்ளேன்.

இதிலே இடம்பெறுங் கதைகள் என் சொந்த ஆக்கங்களல்ல. வழிவழியாக இவை பல இஸ்லாமியப் பெரியோர்களால் காலத்துக்குக் காலம் தொகுத்து எழுதப்பட்டவையாம். அப்பெரியோர்கள் வரலாற்று நிகழ்ச்சிகளை எவ்வாறு கையாண்டுள்ளார்களோ அதையே நானும் பயின்றுள்ளேன். என் கற்பனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யையும் கைச்சரக்கையும் உள்ளே நுழையவிடவில்லை. எனவே, பிறிதொரு வகையிற் சொல்வதானால், தமிழ் செய்ததே என் பங்களிப்பாக அமையும். இன்னும் ஒன்று. தமிழ் முஸ்லிம்கள் மத்தியிலே உர்தூ, பாரசீகச் சொற்களும் பயிலப்படுகின்றன. சமய ரீதியான சொற்கள் அரபுச் சொற்களாக அமைதல், வருங்கால இஸ்லாமிய மத வளர்ச்சிக்கு அநுகூலமானது. இயன்றவரை இந்த அநுகூலவழியைப் பயின்றுள்ளேன்.

'இஸ்லாமிய வரலாற்றுக் கதைகள்' என்ற மகுடத்தில் 'வீரகேசரி' வார வெளியீட்டில் 27-2-1966 முதல் பத்தொன்பது வாரங்கள் எழுதினேன். அவற்றை நூலாக்கித் தருமாறு வீரகேசரி விநியோக முகாமையாளரான எஸ். பாலச்சந்திரன் அவர்கள் பத்து மாதங்களுக்கு முன்னர் கேட்டிருந்தார். அதனை ஞாபகம் வைத்து, மேற்படி நூலைப் புனித ரமழான் மாதத்திலே வெளியிடுதல் பொருத்தமும் சிறப்பும் மிக்கது என்று நோன்பு துவங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரே கூறினார். அவருடைய தூண்டுதல் இந்நூலின் ஆக்கத்திற்குப் பெரிதும் உதவியது. முன்னர் வீரகேசரியில் வெளிவந்த கதைகளைத் தவிர்த்து, முற்றிலும் புதிய கதைகளையே இந்நூலில் தொகுத்துள்ளேன். இது வீரகேசரி வாசகர்களுக்கு ஆதாயமானது. இந்நூலினை நோன்பு காலத்திலே தமிழ் செய்ததில் எனக்குத் திருப்தி. இத்திருப்தி உங்களுக்குக் கிட்டுமாயின் அது எனக்குக் கிட்டும் சன்மானம்.

**வஸ்ஸலாம்**

**எம். ஏ. ரஹ்மான்**

8.10.1972

## என் வழி...

**கல்லறை மீதிலே கண்ணீர் விட்டதால்,**
**என்னை என் தோழர் ஏளனம் செய்கிறார்,**
**"கண்ட கண்ட கல்லறை முன்னெல்லாம்**
**கண்ணீர் வடிப்பதோ காணும்?" என்கிறார்.**
**"துயர்கள் துயர்களைத் தோற்றுவிப்பன;**
**ஆதலால் அனைத்தின் முன்னமும் அழுவேன்;**
**காதலால் எழுந்தவை அவைகள்—**
**ஆதலால்! ஆதலால்!!" என்றறைவேனோ!**

[மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஓர் இலட்சியம். எத்தகைய துலரிச்சல்? அவருக்கு என்னை ஏகலைவனாக நியமித்துக் கொண்டேன்.

1945 ஆம் ஆண்டில் துயர அநுபவம் ஒன்று ஆஸாத் மீது கவிந்தது. அப்பொழுது, அராபியப் பெரும் புலவனான முல்தமித் பின் நுவைரா தன் சகோதரியின் மரணத்தின்போது பாடிய பாடலே ஆஸாத்தின் துயருக்கு மருந்தாக அமைந்தது.

1972 ஆம் ஆண்டில் என் அக்காளின் பிரிவு என்ற துயர் என்மீது கவிந்தது. குருவின் துயர் துடைத்த அந்த அருமருந்து என் நெஞ்சிலே எதிரொலிக்கலாயிற்று.]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளே....


| | | |
|---|---|---|
| 1. | நோன்பு | 9 |
| 2. | ஏக்கம் | 12 |
| 3. | காருண்யம் | 15 |
| 4. | தகுதி | 17 |
| 5. | துயர் | 19 |
| 6. | நேர்மை | 22 |
| 7. | தொழுகை | 25 |
| 8. | மரணம் | 27 |
| 9. | தயாளம் | 31 |
| 10. | கொடை | 33 |
| 11. | சத்தியம் | 35 |
| 12. | வசதி | 37 |
| 13. | பாங்கு | 39 |
| 14. | சபதம் | 42 |
| 15. | வீரம் | 44 |
| 16. | தாகம் | 46 |
| 17. | ஆதாயம் | 49 |
| 18. | கொள்கை | 50 |
| 19. | அறிவு | 53 |
| 20. | வீரம் | 56 |
| 21. | நீதி | 58 |
| 22. | நோக்கு | 61 |
| 23. | பண்பு | 64 |
| 24. | மன்னிப்பு | 67 |
| 25. | எழுத்து | 69 |
| 26. | சாதனை | 71 |
| 27. | நிலம் | 73 |
| 28. | பதவி | 76 |
| 29. | முறைமை | 78 |
| 30. | நேர்மை | 79 |
| 31. | கழுதை | 81 |
| 32. | முட்டை | 83 |
| 33. | புகழ்ச்சி | 85 |
| 34. | விருந்து | 87 |
| 35. | படுக்கை | 89 |
| 36. | பிரயாணி | 91 |
| 37. | பங்கு | 98 |
| 38. | தானம் | 99 |
| 39. | தியாகம் | 101 |
| 40. | முற்றும் | 103 |


# நோன்பு

## 1

அன்று நோன்புப் பெருநாள். அதிகாலையிலிருந்தே ஈத் பெருநாளைக் கொண்டாடுவதற்கான ஆயத்தங்களிலே எல்லோரும் சுறுசுறுப்புடன் ஈடுபட்டனர். மதீனா நகர் முழுவதும் களிப்பிலே பிரபை சிந்தியது. நோன்புப் பெருநாள் தொழுகைக்கான நேரம் நெருங்கிக் கொண்டிருந்தது. தம்மிடமுள்ள மிகச் சிறந்த ஆடைகள் புனைந்து, முதியவர்களும் இளையவர்களுமாக தொழுகை மைதானத்தை நோக்கி நடக்கலாயினர்.

தொழுகை முடிந்தது. சிறுவர்கள் விளையாட்டிலே ஈடுபடலாயினர். வீடு திரும்பிக் கொண்டிருந்த பெருமானாரின் பார்வை ஒரு சிறுவனின் மீது படிந்தது. அவன் மெலிந்திருந்தான். அழுக்குக் கந்தையை அணிந்திருந்தான். மைதானத்தின் ஒரு மூலையிலே தனிமையில் அமர்ந்து, மௌனமாகக் கண்ணீர் சொரிந்து கொண்டிருந்தான்.

இறைதூதர் அச்சிறுவனை நோக்கி நடந்தார்கள். அவனுடைய தோளினை மெதுவாகப் பற்றினார்கள். ''மகனே! ஏன் அழுகின்றாய்?'' என ஆதரவாகக் கேட்டார்கள்.

சிறுவன் கோபத்துடன் இறைதூதருடைய கையைக் கீழே தட்டிவிட்டு, ''என்னைத் தனிமையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுங்கள். நான் பிரார்த்தனை செய்கின்றேன்'' எனக் கூறினான்.

தம்முடைய கையினாற் சிறுவனுடைய தலை மயிரைக் கோதிக் கொண்டே, ''மகனே, என்ன விஷயம் என்பதை என்னிடம் கூறு,'' என அன்பிலே மிருது மெருகுபெற்ற குரலிலே நாயகம் (ஸல்) கேட்டார்கள்.

முழங்கால்களுக்கிடையிலே தன்னுடைய தலையைப் புதைத்தவாறே, ''இறைதூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட போரிலே என் தந்தை கொல்லப்பட்டார். என்னுடைய தாயார் எங்கேயோ திருமணஞ் செய்தார். என்னுடைய உடைமைகளைப் பிறர் அபகரித்துக்கொண்டார்கள். நான் தாயாரிடம் சென்றேன். அவருடைய புதிய கணவர் என்னைத் துரத்தி விட்டார். இன்று மற்றைய சிறுவர்கள் எல்லோரும் மங்கலமான ஆடை புனைந்து ஆடிப் பாடுகின்றார்கள். ஆனால் நான்? எனக்கு உணவில்லை. உடுக்க உடையில்லை. நிழலுக்கு ஒரு வீடில்லை,'' என அழுதான்.

பெருமானாரின் கண்கள் துளிர்த்தன. அதனை அடக்கி முறுவலித்தவாறே, ''அதனாலென்ன? நான் என்னுடைய குழந்தைப் பருவத்திலேயே என் தந்தையையும் தாயையும் இழந்துவிட்டேன்,'' எனக் கூறினார்கள்.

சிறுவன் பெருமானாரை நிமிர்ந்து பார்த்தான். அவர் யார் என்பதை அடையாளங் கண்டான். அவனுக்குச் சங்கடமாகப் போய்விட்டது. பெருமானார் தமது மெதுமையான குரலிலே, ''மகனே நான் உன் தந்தையாகவும், ஆயிஷா உன் அன்னை



யாகவும், பாத்திமா உன் அக்காளாகவும் வாய்த்தால் நீ சந்தோஷப்படுவாயா?'' எனக் கேட்டார்கள்.

சிறுவன், ''ஆம்!'' என்று தலையசைத்தான். பெருமானார் அச்சிறுவனைத் தமது வீட்டுக்கு அழைத்துச் சென்றார்கள். ஆயிஷா நாயகியை அழைத்து, ''இதோ, உனக்கு ஒரு மகன்,'' என்று பெருமானார் கூறினார்கள்.

அச்சிறுவனை ஆயிஷா நாயகியார் தம் கைப்படவே சுத்தமாக்கினார். உள்ளங் குளிரும்படி சிறுவனை உண்பித்தார். நல்ல ஆடைகளை அணிவித்தார். ''மகனே, இப்பொழுது ஏனைய சிறுவர்களுடன் விளையாடிவிட்டுத் திரும்பி வா!'' எனக் கூறினார்.

அச்சிறுவன் ஆனந்தக் கூத்தாடியபடி மைதானத்திற்கு வந்தான். அவன் சடுதியாக அடைந்திருந்த மாற்றத்தைக் கண்டு மற்றைய சிறுவர்கள் யாவரும் அதிசயப்பட்டார்கள். அவனைச் சூழ்ந்து கொண்டு, அதற்கான காரணத்தை உசாவினார்கள். அவன் நடந்தவற்றை விரிவாகக் கூறினான். அப்பொழுது அச்சிறுவர்களுள் ஒருவன், ''எங்களுடைய தந்தைமார்களும் இன்று இல்லாதிருந்தால், எவ்வளவு நன்றாக இருக்கும்,'' என வியாகூலமடைந்தான்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2

பத்று யுத்தத்தில் முஸ்லிம்களிடம் தாங்கள் அடைந்த தோல்வியை மக்கா வாசிகளினால் மறக்கவே முடியவில்லை. தோல்வியின் அவமானம் அவர்களுடைய உள்ளங்களை நஞ்சு போன்று உறுத்திக்கொண்டே இருந்தது. பழிக்குப்பழி வாங்க வேண்டுமென்ற வெறியிலே தகித்தார்கள்.

கடைசியிலே புகைந்து கொண்டிருந்த நெருப்பு பகார்பற்றி எரிந்தது. அபூ சுபியானின் தலைமையிலே தேர்ந்தெடுக்கப்பட்ட மூவாயிரம் போர்வீரர்கள் மதீனா மீது படையெடுத்தார்கள். அவர்கள் யுத்த கீதங்கள் பாடினார்கள். போர் வீரர்களின் மான உணர்வு கிளறிவிடப்பட்டது. போர்க்களத்திலிருந்து வெற்றியுடன் திரும்பாதவர்கள் வீடுகளிலிருந்து துரத்தியடிக்கப்படுவார்கள் என அச்சுறுத்தப்பட்டார்கள். இந்தப் படையெடுப்பு இஸ்லாத்திற்குப் பேரபாயமாக அமைந்தது. அவர்களுக்கு உறுதியான வெற்றி கிடைக்குமானால், சிறு தொகையினரான விசுவாசிகளின் கூட்டம் அழித்தொழிக்கப்படுவார்கள்.

தம்மைப் பின்பற்றும் விசுவாசிகளுடன் பெருமானார் (ஸல்) ஆலோசனை நடத்தினார்கள். அவர்களுடைய எண்ணிக்கை மிகவும் குறைவு. ஆனால், அவர்கள் எல்லோரிடமும் 'நாம் சத்தியத்தின் பக்கம் நிற்கின்றோம்' என்ற அசைக்க முடியாத உறுதி இருந்தது. எனவே, 'ஜிஹா'திலே வாளைத் தூக்குவதெனத் தீர்மானித்தார்கள். ஆயிரம் விசுவாசிகளைத் திரட்டிக் கொண்டு பெருமானார் புறப்பட்டார்கள்.

சிறிது தூரஞ் சென்றதும் அப்துல்லா பின் உபை என்பவன் முன்னூற்றுக்கும் அதிகமான போர்வீரர்களுடன் பெருமானாரைப் பிரிந்து சென்றுவிட்டான். அவர்களும் மக்கா வாசிகளுடன் சேர்ந்து கொண்டார்கள். எனவே, கிட்டத்தட்ட எழுநூறு வீரர்களுடனே உஹத் மலைக்குக் கிட்ட எதிர்த்தாரையைப் பெருமானார் சந்திக்க நேர்ந்தது.

பயங்கர யுத்தம் துவங்கியது. வெற்றி இருபக்கத்தாருக்கும் இடையில் ஊசலாடிக் கொண்டிருந்தது. ஆரம்பம் முஸ்லிம்களுக்கு அநுகூலமாக அமைந்தது. வெற்றியுடன் போராடினார்கள். எதிரியின் வரிசையை முறியடித்தார்கள். எதிரிகள் பின்வாங்கினார்கள். அவர்களுட் சிலர் போர்க்களத்தை விட்டே ஓடினார்கள். இந்த ஆரம்ப வெற்றியைக் கண்ட முஸ்லிம்கள் ஒழுங்கு முறையை மறந்தார்கள். அவர்களுக்கென நியமிக்கப்பட்ட இடங்களை விட்டு முன்னேறத் தொடங்கினார்கள். இதனால் அவர்களுக்கிடையிலேயே ஒரு குழப்ப நிலை உருவாகியது.

முன்னெச்சரிக்கையுடன் இருந்த எதிரிகள் இந்தக் குழப்ப நிலையை அவதானிக்கத் தவறவில்லை. எனவே, அவர்கள் விரைவாக மீண்டும் ஒன்றுகூடி, புதிய வேகத்துடன் பின்னாலிருந்து தாக்கத் தொடங்கினார்கள். முஸ்லிம் போர்வீரர்கள் அசாத்தியத் துணிச்சலைப் பிழிந்து போராடினார்கள். ஆனாலும், ஒழுங்கு முறையை மீறியதால் ஏற்பட்ட குழப்ப நிலைக்கு அவர்களுடைய துணிச்சல் ஈடுகொடுக்கவில்லை. பல முக்கியமான முஸ்லிம்கள் போராடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீழ்ந்தார்கள். ஆனால், எதிரிகளினால் முஸ்லிம்கள் நிர்மூலமாக்கப்படுவது மட்டும் தடுத்து நிறுத்தப்பட்டது.

பெருமானாரும் காயமுற்றார்கள். அவர்களுடைய நெற்றியிலே கற்கள் வெட்டிய காயங்கள் காணப்பட்டன. பற்கள் உடைந்தன. அவர்கள் அணிந்திருந்த இரும்புத் தொப்பி தலைக்குள் நெளிந்திருந்தது. புலனிழந்து அகழி ஒன்றிலே வீழ்ந்தார்கள். அலி (ரலி) பெருமானாரைத் தூக்கினார்கள்.

பெருமானாருக்குத் தெளிவு ஏற்பட்டதும், தமது முகத்திலிருந்த இரத்தத்தைத் துடைத்தபடி, தமது கண்களை ஆகாயத்தை நோக்கி உயர்த்தி, ''அல்லாஹ்! என்னுடைய மக்களைச் சரியான பாதைக்குக் கொண்டு வா. அவர்கள் தாங்கள் செய்வது என்ன என்பதைக்கூட அறியாதவர்களாகத் தவறிழைக்கின்றார்கள்,'' எனப் பிரார்த்தித்தார்கள்.





# காருண்யம்

## 3

ஒருநாள் பெருமானார் (ஸல்) தமது தோழர்களுடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது ஒருவன் பெருமானாரிடம் வந்து, ''பெருமானாரே, ஓர் அற்புதச் சம்பவம்'' என்று கூறினான்.

பெருமானார் தாம் அச்சம்பவத்தை அறிய விரும்பும் தோறணையில் அவனைப் பார்த்தார்கள்.

அவன் தொடர்ந்து சொன்னான்:


''நான் ஒரு புதரைத் தாண்டி நடக்கையில், ஏதோ கீச்சிடுவதான குரல் கேட்டது. நான் எட்டிப்பார்த்தேன். அங்கு இரண்டு புறாக் குஞ்சுகள் இருக்கக் கண்டேன். அவற்றைப் பிடித்து என் மேலங்கியில் வைத்துக் கொண்டு, என் பயணத்தைத் தொடர்ந்தேன். அப்பொழுது தாய்ப் புறா வந்து, கூட்டிலே குஞ்சுகளைக் காணாது, அழுகுரல் எழுப்பித் தத்தளிக்கத் தொடங்கியது. நான் என் மேலங்கியைத் திறந்து காட்டினேன். என்ன ஆச்சரியம்! தாய்ப்புறா என் மேலங்கிக்கு வந்து குஞ்சுகளை அரவணைத்துக் கொண்டது. அவை எல்லாம் என்னுடைய மேலங்கியில் இப்பொழுதும் இருக்கின்றன. நீங்களே பாருங்கள்!'' இவ்வாறு கூறியபடி தன் மேலங்கியைத் திறந்து பெருமானாருக்கு முன்னால் வைத்தான்.

அந்தப் பறவைகளைப் பார்த்ததும், ''உடனேயே போய் இவற்றைக் கூட்டிலே விட்டுவிடு,'' என்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமானார் அவனுக்குக் கூறினார்கள். இதைக் கூறி முடித்ததும், சடுதியாக மௌனத்தில் ஆழ்ந்தார்கள். சிறிது நேரம் கழிந்ததும், தமது தோழர்களைப் பார்த்துக் கண்ணீரிலே குழைந்த குரலிலே பின்வருமாறு கூறினார்கள்.

“ஓர் அன்னையின் அன்பு அளவு கடந்தது. தன் குஞ்சுகள் மீது எத்தகைய நெஞ்சுமுட்டிய அன்பினை அத்தாய்ப் பறவை வைத்துள்ளது! ஆனாலும், என் தோழர்களே, அல்லாஹ் தன்னுடைய படைப்புகளின் மீது கொண்டுள்ள மகத்தான காருண்யம் எல்லையற்றது!”





# தகுதி

## 4

எத்தனையோ ஆண்டுகள் நீடித்த சோதனைகளுக்கும் இடர்களுக்கும் பின், இறை தூதராம் முஹம்மது (ஸல்) அவர்களின் புனித தூது இறுதியில் அராபியாவில் வெற்றி பெற்று நிலைத்தது. இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட பல்வேறு பகுதிகளிலுமிருந்து ஏராளமான செல்வம் மதீனத்திற்குள் வந்த வண்ணம் இருந்தது.

இந்தக் காலத்தில் இறைதூதரின் பிள்ளைகளுள் பாத்திமா நாயகி மட்டுமே உயிர்வாழ்ந்து கொண்டிருந்தார்கள். பாத்திமா நாயகி தம்மிடம் வரும் நேரங்களிலெல்லாம் பெருமானார் இரு கரம் நீட்டி வரவேற்று, தன் பக்கத்திலே அமர்த்திக் கொள்ளுவார்கள். பாத்திமா (ரலி) வின் முகத்திலுள்ள வியர்வையைப் பெருமானார் தமது துண்டினாலே துடைத்து விடுவார்கள். அன்றேல், அவருடைய தலையை மெதுவாக நிமிர்த்தி, அவருடைய உடல்நலத்தைப் பற்றி விசாரிப்பார்கள்.

ஒரு தடவை பாத்திமா நாயகி பெருமானாரிடம் வந்திருந்தார். வழக்கம் போல சுக விசாரணைகள் பரிமாறிக் கொண்டார்கள். பின்னர் பாத்திமா (ரலி) துக்கத்துடன், “தந்தையே! குடும்பத்திலே அதிகம் பேருக்கு உணவு தயாரிக்க வேண்டி இருக்கின்றது. நாங்கள் இருவர், மகன்கள் மூவர், மருமக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நால்வர், எப்பொழுதும் வந்துகொண்டிருக்கும் விருந்தினர்கள். இவர்கள் எல்லோருக்கும் நான் ஒருத்தியே சமையல் செய்யவேண்டி இருக்கிறது. இதனால் மிகவுங் களைப்படைந்து விடுகின்றேன். இப்பொழுது தான் யுத்தக் கைதிகளாக பல பெண்களும் மதீனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளார்கள் எனக் கேள்விப்படுகின்றேன். அவர்களுள் ஒருத்தியை மட்டும் எனக்குத் தருவீர்களானால், எனக்கு மிகவும் உதவியாக இருக்கும்'' என்று கூறினார்.

நடுங்கும் குரலிலே பெருமானார் (ஸல்) வருமாறு கூறினார்கள்: ''என் பிரிய மகளே, நீ இங்கே பார்க்கும் செல்வங்களும் யுத்தக் கைதிகளும் முஸ்லிம் சமூகத்தின் உடைமை. நான் அதன் பொருளாளர் மட்டுமே. தகுந்த இடங்களிலிருந்து அவற்றைத் தருவித்து, தகுதி யுடையருக்குப் பகிர்ந்தளித்தல் மட்டுமே என் பொறுப்பு. என் மகளே, உனக்குத் தகுதி இல்லை. எனவே, இங்குள்ள எதையும் உனக்கு என்னாலே தர முடியாது. உலகம் என்பது செயற்களமாகும். உன்னுடைய கடமைகளைத் செய்து கொண்டிப்பாயாக. களைப்படையும் வேளைகளில் அல்லாஹ்வை நினைத்துக் கொள்; அவன் உதவியை நாடு, அவன் உனக்குப் பலமும் சக்தியும் தருவான்,'' எனக் கூறினார்கள்.





## துயர்

## 5

ஒரு நாள் ஆயிஷா நாயகியார் பெருமானாரைப் பார்த்து, ''உஹத் யுத்தத்தினைப் பார்க்கிலும் மிகப் பயங்கரம் ஒன்றினை உங்கள் வாழ்க்கையில் அநுபவித்திருக்கின்றீர்களா?'' என்று கேட்டார்.

ஆனால், பெருமானாருடைய வாழ்க்கையிலே அவர் குறிப்பிடும் அந்தப் பயங்கர நிகழ்ச்சி என்ன? பிறப்பதற்கிடையிலே பெருமானார் தமது தந்தையை இழந்தார்கள். குழந்தைப் பருவத்திலேயே தமது தாயாரையும் இழந்தார்கள். எனவே, அவர்கள் இந்த உலகத்திலே ஏழையாக விடப்பட்டார்கள். ஆனால், இவை ஒன்றையும் அவர்கள் தமது வாழ்க்கையின் அதி துன்பம் என்று குறிப்பிட்டதில்லை. பெருமானார் இஸ்லாத்தைப் போதித்த ஆரம்ப நாள்களிலே குறைஷிக்குலத் தலைவர்கள் அவர்களைக் கடுமையாக எதிர்த்தார்கள். அவர்களுட் சிலர் அபூத்தாலிப் பெருமானாருக்கு அளித்துவரும் பாதுகாப்பினை வாபஸ் பெற வேண்டும் என்று வற்புறுத்தினார்கள். அபூத்தாலிப் இந்தக் கோரிக்கைக்கு இணங்கலாம் போன்ற ஒரு நிலைமை உருவாகியது. அவ்வாறு நடந்தால் பெருமானார் எதிரிகளின் தயவு தாட்சண்யமற்ற கோப வெறிக்குள் அகப்பட்டிருப்பார்கள். இதனையும் பெருமானார் அதிபயங்கர அநுபவமாகக் குறிப்பிடவில்லை பின்னர், அவர்களைப் பட்டினி போட்டுக் கொல்ல முயற்சி எடுக்கப்பட்டது. மலையுச்சியிலிருந்து அவர்கள்மீது பாறைகள் உருட்டி விடப்பட்டன. அவர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள் உறங்கிக் கொண்டிருந்த சமயம் அவர்களுடைய கூடாரத்திற்குத் தீ வைக்கப் பட்டது. அவர்களுடைய உணவிலே கடு நஞ்சு இடப்பட்டது. எல்லாச் சந்தர்ப்பங்களிலும் அவர்கள் மயிர் இழையிலேயே தப்பினார்கள். ஆனால், இவற்றை எல்லாம் கூட அவர்கள் தமது பயங்கர அநுபவமாகக் கருதவில்லை.

இவை எல்லாவற்றிற்கும் மாறாக ஆயிஷா நாயகியின் கேள்விக்குப் பின்வருமாறு பதிலளித்தார்கள்.

''என் போதனைகளை ஆரம்பத்தில் மக்காவாசிகள் அதிதீவிரமாக எதிர்த்தார்கள். எனவே, தாயிப்பிலே என்னுடைய போதனைகளை நடத்த தாயிப்பின் தலைவனிடம் அநுமதி கேட்டிருந்தேன். அநுமதி வழங்கப் பட்டது. ஆனால், அந்தத் தலைவன், எனக்கு எதிராகக் கிளர்ந் தெழுவதற்காக இரகசிய ஏற்பாடு செய்திருந்தான். நான் போதனையைத் துவங்கியதும் அவர்கள் என்னைத் தாக்கினார்கள். என் உடல் எல்லாம் காயங்கள் ஏற்பட்டன. நான் மூர்ச்சையாகி விழுந்தேன். தாயிப்பிலிருந்து கொஞ்சத் தூரத்திற்கு என் தோழர் ஒருவர் என்னைத் தமது தோள்களிலே சுமந்து சென்றார். அங்கே ஒரு மரத்தின்கீழ் என்னைப் படுக்க வைத்தார். கிராமத்திற்குள் சென்று தண்ணீர் கேட்டார். எல்லோரும் தண்ணீர் கொடுக்க மறுத்தார்கள். அவர் ஏமாற்றத்துடன் திரும்பினார்.

''அப்பொழுது நான் மூர்ச்சை தெளிந்தேன். ஆகாயத்தை நோக்கி எனது கைகளை உயர்த்திப் பிரார்த்தித்தேன். 'எல்லாம் வல்ல அல்லாஹ், இது உன்னுடைய தூது, மக்களுக்கு இதனை அறிவிக்கும்படி நீயே ஆணை பிறப்பித்தாய். ஆனால், மக்கள் எனக்குச் செவிசாய்க்கின்றார்களில்லை. இதற்கு என்னிடமுள்ள சில குறைபாடுகளும் பலவீனங்களும் காரண



மாக இருக்கலாம். காருண்ய அல்லாஹ், எனக்கு நெஞ்சிலே உரத்தையும் குரலிலே உறுதியையுந் தா!'

''அதே நேரத்தில், தாயிபை பாழ்வெளியாக மாற்றுவதற்கு என்னுடைய சமிக்ஞைக்காகக் காத்திருப்பதுபோல ஜிப்ரீல் வானத்திலே தோன்றியதைக் கண்டேன். நான் பயத்துடன் அலறினேன். 'இல்லை, இல்லை. அது நடக்கக்கூடாது. மனித குலத்திற்கு ஓர் அருட்கொடையாகவே இறைவன் என்னை அனுப்பினான். அவர்களுக்குத் துன்பம் நேர்வதை நான் விரும்பவில்லை. அவர்கள் என்னுடைய தூதினை ஏற்றுக் கொள்ளாவிட்டாலும், அவர்களுடைய சந்ததியினர் ஏற்றுக் கொள்ளலாமல்லவா?'

''தாயிப்பிற்கு ஏற்பட இருந்த அந்தத் துன்பமே என்னுடைய வாழ்க்கையிலே அதி பயங்கரத் துயர் அநுபவமாகும்.''



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்மை

## 6

அராபியாவிலே அது பெரும் பரபரப்பூட்டும் நிகழ்ச்சியாக அமைந்தது. அன்று முழுமையான சூரியகிரகணம். சோபை இழந்த ஒளி மெல்ல இருளாகக் கரைந்தது. ஆனாலும், நண்பகல் வேளை. வானத்திலே சந்திர தாரகைகளைக் காணக்கூடியதாக இருந்தது. மதீனாவிலே பெரும் பரபரப்புக் காணப்பட்டது. இத்தகைய ஒரு நிகழ்ச்சியை அவர்கள் கண்டதில்லை. அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்ததாக அவர்களுடைய மூதாதையர்கள் சொல்லக் கேட்டது தானும் இல்லை.

முஸ்லிம்களும் முஸ்லிம் அல்லாதாரும் தமக்கிடையிலே, கூட்டம் கூட்டமாகக் குசுகுசுக்கத் தொடங்கினார்கள். ''இன்று உலகத்திலே மிகப் பிரமாண்டமான கேடு ஒன்று நடந்திருக்க வேண்டும். ஆண்டவனுக்கு மிகவும் வேண்டிய ஒருவர் இன்று இறந்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் இந்த அசாதாரண சம்பவம் ஏன் நிகழ வேண்டும்?''

அப்பொழுதுதான் அந்தக் கூட்டத்தை வந்தடைந்த ஒருவன், ''நீங்கள் இன்னமும் கேள்விப்படவில்லையா? முஹம்மதுவினுடைய புத்திரனான இப்ராஹிம் இன்று இறந்து விட்டாரல்லவா?''

''அந்தா, பார்த்தீர்களா?'' என்று கூட்டத்தினர் ஒரே குரலிலே சத்தம் போட்டார்கள்.

இப்ராஹீமின் மரணத்தினாலேதான் இந்த அசாதாரண சம்பவம் நிகழ்ந்தது என்ற முடிவுக்கு எல்லோரும் வந்தார்கள். கூட்டத்திலிருந்த ஒருவர் ஒரு ஞானியைப் போன்று தலையை ஆட்டிக்கொண்டு, ''முஹம்மது சாதாரண மனிதரல்ல என்பது எனக்கு எப்பொழுதோ தெரியும். அவர் உண்மையான ஒரு தூதராக இல்லாவிட்டால், ஒரு சிறு குழந்தையின் மரணத்திற்காக இப்படி ஒரு கிரகணத்தை இறைவன் உண்டாக்கி இருப்பானா?'' எனக் கூறினார். அந்தக் கூற்றை மற்றும் அநேகரும் ஏற்றுக்கொண்டார்கள். இந்தக் கதைகள் பெருமானாரின் செவிகளையும் எட்டின.

அப்பொழுது அராபியா முழுவதும் அவர்களுக்கு எதிரிகள் இருந்தார்கள். அவர்கள் பெருமானாருடைய தலைக்கான வேட்டையிலே ஈடுபட்டிருந்தார்கள். அவர்களை ஏற்றுக் கொள்ளாத எதிரிகள் பலர் இந்த நிகழ்ச்சியினால் அவர்களை ஏற்றுக்கொள்ளும் மனோநிலையில் இருந்தார்கள். பெருமானார் மட்டும் மௌனத்தைக் கடைப்பிடித் திருப்பார்களேயானால், அவர்களைப் பின்பற்றுவோர் தொகை ஆயிரக்கணக்காகப் பெருகி, இஸ்லாத்தைத் தழுவியிருப்பார்கள்.

ஆனால், சத்தியத்தின் வீரமுதல்வரான பெருமானாரினால் அத்தகைய ஒரு சூழ்நிலையைத் தனக்குச் சாதகமாகத் திருப்புதல் நினைத்துப் பார்க்க முடியாத ஒன்றாக இருந்தது. அதே சமயம், தமது நாட்டு மக்கள் இத்தகைய சகுனங்களிலே நம்பிக்கை வைக்கும் அறியாமையைக் கண்டு மனம் மிக வருந்தினார்கள்.

அவர்கள் தெருக்களிலும் கடைவீதிகளிலும் கூடியிருந்த மக்களை அழைத்தார்கள். அவர்களும் நாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கத்தின் அழைப்பினை ஏற்றுக் கூடினார்கள். அவர்களைப் பார்த்துப் பெருமானார் வருமாறு பேசினார்கள்:

''சூரியனும் சந்திரனும் அல்லாஹ்வின் சிருஷ்டிகளே அவனுடைய கட்டளைப்படியே அவை எழுந்து இயங்குகின்றன. எந்த ஒரு மனிதனுடைய இறப்புக்காகவோ பிறப்புக்காகவோ ஒரு கிரகணம் தோன்றுவதில்லை. இத்தகைய நிகழ்ச்சிகளுக்கு நீங்கள் சாட்சிகளாக இருந்தால் அல்லாஹ்வை நினையுங்கள்; அவனைத் துதியுங்கள்.''





# தொழுகை

## 7

ஒருதடவை யுத்தத்திலிருந்து பெருமானார் (ஸல்) திரும்பிக் கொண்டிருந்தார்கள். இரவானதும் தம்முடைய வீரர்களைப் பார்த்து, இரவிலே காவல்காக்க யார் தயாராக உளர் என உசாவினார்கள். முஹாஜிரீனான ஹழரத் அம்மார் பின் யாஸிர் என்பாரும், அன்ஸாரியான உப்பாத் பின் பஷ்ர் என்பாரும் தாங்கள் அப்பணியினை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாக அறிவித்தார்கள். அவர்கள் அப்பணிக்கு நியமிக்கப்பட்டார்கள். எதிரிகள் வரக்கூடிய அயலிலுள்ள மலைப்பாதை ஒன்றினைக் காவல் புரியும்படி பெருமானார் (ஸல்) பணித்தார்கள்.

இரவின் முற்பகுதியில் உப்பாத்தும், பிற்பகுதியில் அம்மாரும் காவல் பார்ப்பதென அவர்கள் இருவரும் தமக்குள் ஏற்பாடு செய்து கொண்டார்கள்.

உப்பாத் தொழுகைக் கம்பளத்திலே நின்று தமது தொழுகையை ஆரம்பித்தார்.

பெருமானாரின் நடமாட்டத்தை அறிவதற்காக எதிரிகள் ஒருவனை உளவுக்கு அனுப்பியிருந்தனர். அவன் அந்த மலைப்பாதையால் வந்து கொண்டிருந்தான். தொழுகைக் கம்பளத்திலே நிற்கும் உப்பாத்தைக் கண்டதும், அவன் ஓர் அம்பை எய்தான். அம்பு உப்பாத்தைத் தாக்கியதாயினும், சலனம் எதுவுமடையாது தமது தொழுகையைத் தொடர்ந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார். இரண்டாவது அம்பையும் அவன் எய்தான். அதுவும் அவரை காயப்படுத்தியதாயினும் அவர் தமது தொழுகையைத் தொடர்ந்தார். அவர் ருக்கூஹும் சஜ்தாவும் செய்து தொழுகையை முடித்தார். அதன் பின்னரே அவர் தம்முடைய தோழர்களை எழுப்பினார்.





## மரணம்

### 8

இஸ்லாம் பரவிய ஆரம்ப காலம். இறைதூதரையும் அவர் மீது விசுவாசங் கொண்டோரையும் அராபியர் மூர்க்கமான ஆக்கினைக்குட்படுத்திக் கொண்டிருந்த காலம்.

அரபுத் தலைவன் அனுப்பி வைத்த ஒரு தூதுவன் பெருமானாரிடம் வந்து வருமாறு கூறினான்.

''எங்களுடைய குலத்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவிக் கொள்ள விரும்புகின்றார்கள். ஆனால் தகுதியான போதகர் ஒருவர் நமக்குக் கிடைக்கவில்லை. இப்பொருள் குறித்து நன்கு கற்றறிந்த சிலரைத் தயவு செய்து அனுப்பி வைப்பீர்களா?''

பெருமானார் சில பிரசாரகர்களை அனுப்பி வைத்தார்கள்.

அந்த மதப் பிரசாரகர்கள் அக்குலத்தவர்களுடைய எல்லையை அண்மித்ததும், தலைவன் தன் வீரர்களுடன் வந்து அவர்களைச் சுற்றி வளைத்துக் கொண்டு, ''சரணடைந்து தப்பிக் கொள்ளுங்கள்; அன்றேல், மரணத்தை ஏற்றுக்கொள்ளுங்கள்,'' என்று அச்சுறுத்தினான்.

குபைர் இப்னு அதியும் ஸைத் இப்னு அஷ்னாவும் அவர்களுடைய வார்த்தைகளிலே நம்பிக்கை வைத்துச் சரணடைந்தார்கள். ஏனைய மதப்பிரசார

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கர்கள் தாம் துரோக இருளுக்குள் அழைத்துச் செல்லக்கூடும் என ஐயுற்று, போராடி இறந்தனர். குபைரையும் ஸைதையும் விலங்கிட்டு மக்காவுக்கு அனுப்பி வைத்தார்கள்.

மக்காவிலிருந்த குறிப்பிட்ட குலத் தலைவன் ஒருவனை பத்று போரிலே குபைர் கொன்றிருந்தார். அந்தத் தலைவனின் புத்திரர்கள் அதிக விலை கொடுத்து குபைரை வாங்கினார்கள்.

பொதுமக்கள் எல்லோரும் பார்த்துக் கொண்டு நிற்க, மிகக் கொடிய முறையிலே குபைரைக் கொன்று பழிக்குப் பழி வாங்க அப்புத்திரர்கள் தீர்மானித்தார்கள். பாரமான சங்கிலியிலே பிணைக்கப்பட்டு இருள் சூழ்ந்த சிறைக்குள்ளே குபைரை அடைத்து வைத்தார்கள். அவலத்திற்குள்ளான அந்தக் கைதியினுடைய சோகக் குரல் அவ்வீட்டிலிருந்த ஒரு பெண்ணின் நெஞ்சைத் தொட்டது.

அவள் ஒருவருக்குந் தெரியாமல் சிறைச்சாலையை அடைந்து, ''கைதியே, உனக்கு ஏதாவது ஆசைகள் இருந்தால் எனக்குச் சொல்; நான் அவற்றை நிறைவேற்றி வைக்க முயலுவேன்'' என்றாள்.

கண்களிலே நன்றிப் பெருக்கு வழிய நிமிர்ந்து பார்த்து, ''எனக்கு இதைத் தவிர வேறு ஆசை கிடையாது. என்னுடைய மரணம் சரியாக எத்தனை மணிக்கு நிகழுமெனச் சொல்லுங்கள். முடியுமானால் சவரஞ் செய்து கொள்வதற்குச் சவரக்கத்தி ஒன்று தந்து உதவுங்கள்,'' எனப் பதிலளித்தார்.

அந்தப் பெண் அங்கிருந்து சென்று சிறுவனை மகனிடம் கூர்மையான சவரக் கத்தி ஒன்றினை அனுப்பி



வைத்தாள். அச்சிறுவன் அசாதாரண அழகும் கவர்ச்சியும் கொண்டவனாக விளங்கினான். குபைர் அவனைத் தன் கைகளிலே ஏந்தி அணைத்துக்கொண்டார்.

''என் சிறுவனே, நீ எத்தகைய ஒரு அறிவில்லாத தாயினைப் பெற்றிருக்கின்றாய்? ஓர் எதிரியினுடைய கொலைக்கரங்களிலல்லவா உன்னை அவள் எறிந்திருக்கின்றாள்'' என்று கூறினார்.

தாயும் சிறுவனை அனுப்பியதிலுள்ள தவறினை உணர்ந்து, அப்பொழுது அங்கு வந்து கொண்டிருந்தாள். குபைர் சொல்லியவை அவளுடைய செவிகளிலே விழுந்தன. பயத்தினாலே கலவரமடைந்து சிறைக் கதவை அடைந்தாள். குபைர் அந்தச் சிறுவனைத் தாயிடம் ஒப்படைத்து, ''அன்னையே, பயப்படவேண்டாம். துரோகம் என்பதற்கு இஸ்லாத்தில் இடமில்லை,'' என்றார்.

மரண தண்டனையை நிறைவேற்ற நியமிக்கப்பட்ட நாளன்று அவர் மைதானத்திற்குக் கொண்டு வரப்பட்டார். அல்லாஹ்வுக்குத் தமது கடைசிப் பிரார்த்தனையைச் செலுத்த அனுமதி கோரினார். அனுமதி வழங்கப்பட்டது. அவர் தமது தொழுகையை விரைவாக முடித்துக் கொண்டு, ''கடைசிப் பிரார்த்தனையைச் சற்று நீட்டுவதற்கே ஒருவன் இயல்பாக விரும்புவான். ஆனால், நான் விரைவாக முடித்துக் கொண்டதற்குக் காரணம் நீங்கள் யாரும் நான் பயந்து போனேன் என எண்ணக்கூடாது என்பதற்காகத்தான்'' என்று கூறினார்.

தூக்கு மேடைக்குக் குபைர் அழைத்துச் செல்லப்படுவதற்கு முன்னர், ''இன்னும் நேரம் இருக்கின்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றது. இஸ்லாத்தைத் துறந்து, நீ மீண்டும் ஒரு புது வாழ்வு பெறு'' எனக் கேட்கப்பட்டார்.

''இஸ்லாம் இல்லாமல் வாழ்வதைப் பார்க்கிலும், இஸ்லாத்திலே மரணமடைதல் எவ்வளவோ மேலானது,'' என்று மிக அமைதியான உறுதிவாய்ந்த குரலிலே கூறினர்.

தூக்கு மேடையிலே, அந்த மா வீரர், கருணையற்ற அம்பு மழைகளினுலும், ஈட்டி எறிகளினுலுங் கொல்லப்பட்டார்.





## தயாளம்

9

ஆயிஷா நாயகியைப் பற்றிப் பல வரலாற்றுச் சம்பவங்கள் கூறப்படுகின்றன. பெருமானர் காலமான பிறகு ஓர் ஏழைப்பெண் தன்னுடைய இரண்டு மகன்களையும் அழைத்துக்கொண்டு ஆயிஷா நாயகியிடம் வந்தாள். உண்பதற்கு ஏதாவது தரும்படி வேண்டினுள். ஆயிஷா நாயகியிடம் அப்பொழுது மூன்று பேரீச்சம் பழங்கள் மட்டுமே இருந்தன. அவர் அவற்றைக் கொடுத்தார். ஒவ்வொரு பழத்தினையும் பிள்ளைகளும் தாயுமாக வாயிலே போட்டுக்கொண்டார்கள்.

பிள்ளைகள் தங்களுடைய பேரீச்சம் பழங்களைச் சாப்பிட்ட பின்னர், தாயை ஆவலுடன் பார்த்தார்கள். அந்தத் தாய் தன் வாயிலிட்ட பேரீச்சம் பழத்தை எடுத்து இருபாதியாக்கித் தன் பிள்ளைகளுக்கே அளித்தாள்.

இந்தப் பரிதாபமான காட்சி ஆயிஷா நாயகியின் மனத்தை வெகுவாக உருக்கியது. அவருடைய கண்கள் கண்ணீர் உகுத்தன.

பிறிதொரு சமயம் ஆயிஷா நாயகியார் சாப்பிட உட்கார்ந்து, கண்ணீர்விடத் தொடங்கினர். ''ஒரு முழுமையான சாப்பாடு கிடைக்கும் பொழுது என்னல் அழாது இருக்கமுடியாது,'' என்று கூறினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


''ஏன் அப்படி?'' எனப் பணிப்பெண் கேட்டாள்.

''அப்பொழுதெல்லாம் அல்லாஹ்வின் தூதர் வாழ்ந்த சூழ்நிலை என் ஞாபகத்திற்கு வந்துவிடும். இறைச்சியும் ரொட்டியும் அடங்கிய இரண்டு முழுச் சாப்பாடு அவருக்குக் கிட்டியது அரிது,'' என்று ஆயிஷா நாயகியார் பதிலளித்தார்.

அமீர் முஆவியாவின் ஆட்சிக் காலத்தின் இறுதி நாள்களில், அவர் ஆயிஷா நாயகியாருக்கு ஒரு லட்சம் திர்கங்களை அனுப்பி வைத்தார். இந்தப் பரிசில் அதிகாலையிலே வந்தடைந்தது. ஆயிஷா நாயகி பொழுது படுவதற்கிடையில் எல்லாவற்றையும் ஏழையோருக்குப் பகிர்ந்தளித்து விட்டார்.

ஆயிஷா நாயகி (ரலி) அன்றைய தினம் நோன்பிருந்தார். நோன்பைத் திறப்பதற்கு வீட்டில் ஏதுவுமே இருக்கவில்லை. ''நோன்பைத் திறப்பதற்காக ஏதாது மிச்சம் வைத்திருக்கலாம்,'' என்று பணிப்பெண் வருத்தத்துடன் கூறினாள்.

''ஆனாலும் பெண்ணே, நீ அந்த நேரத்திலல்லவா இதை நீ ஞாபகமூட்டியிருக்க வேண்டும்'' என்று ஆயிஷா நாயகியார் மிக அமைதியாகக் கூறினார்.





# கொடை

## 10

ஒருதடவை உமர் இப்னு அல் கத்தாப் (ரலி) பின்வருமாறு கூறினார்:

'ஒரு தடவை அல்லாஹ்வின் திருத்தூதர் நம்மிடமுள்ள செல்வத்தின் விகிதத்திற்கு ஏற்பத் தானம் கொண்டுவருமாறு கேட்டிருந்தார்கள். ''கொடையில் எப்பொழுதாவது அபூபக்கரை மிஞ்ச வேண்டுமென்றால், அது இன்றைக்காகத்தான் இருக்கும்' என்று நினைத்து என் சொத்தின் அரைப் பகுதியைத் தானமாகக் கொண்டு சென்றேன். இறைதூதர் என்னைப் பார்த்து, 'உமது குடும்பத்திற்கு என்ன வைத்திருக்கிறீர்?' என்று கேட்டார்கள். 'இதைப் போல் ஒரு பங்கு' என்று நான் உடனே பதிலளித்தேன். எல்லாச் சொத்துக்களுடன் அங்கு வந்த அபூபக்கரைப் பார்த்து, அல்லாஹ்வின் திருத்தூதர், 'ஓ, அபூபக்கர் உம்முடைய குடும்பத்திற்கு என்ன வைத்திருக்கின்றீர்?' எனக் கேட்டார்கள். 'அல்லாஹ்வையும் அவனுடைய திருத்தூதரையும் அவர்களுடன் விட்டு வந்திருக்கின்றேன்,' என்றார். 'என்னால் அவரை எதிலுமே மிஞ்ச முடியாது' என்று நான் கூறினேன்.''

ஆண்களிலே அபூபக்கர் (ரலி) இறை தூதரையும் இஸ்லாத்தையும் ஏற்றுக் கொண்ட முதல்வராவர். எத்தனையோ இடர்களின் மத்தியிலேயும் அவர் இறை தூதருக்கு இணை பிரியாத தோழராக விளங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஒரு சமயம் தமது தோழர்களுடன் பேசிக் கொண்டிருந்தார். அவருக்குப் பக்கத்தில் வீரம் மிக்கவரான அவருடைய மகன் அப்துர் ரஹ்மானும் அமர்ந்திருந்தார். அவர் ஒரு காலத்தில் இஸ்லாத்தின் கடுமையான எதிரியாவர். ஆனால், இப்பொழுது அவர் இஸ்லாத்தின் மிக உறுதியான ஆதரவாளர்களுள் ஒருவராகத் திகழ்ந்தார். பத்று யுத்தத்தின் போது பெருமானாருக்கும் தமது தந்தை அபூபக்கருக்கும் எதிராக அப்துர் ரஹ்மான் எவ்வளவு கடுமையாகப் போராடினார் என்பதை யாரும் மறந்திருக்க மாட்டார்கள்.

அவர்களுடைய சம்பாஷணை பத்று யுத்தத்தைப் பற்றித் திரும்பியது. அப்பொழுது அப்துர் ரஹ்மான் தமது தந்தையின் பக்கமாகத் திரும்பி, ''தந்தையே. பத்று யுத்தத்தின் போது எத்தனையோ சந்தர்ப்பங்களில் நீங்கள் என் வாள் வீசப் படக்கூடிய நெருக்கத்திற்கு வந்திருக்கின்றேன். அப்பொழுதெல்லாம் என் குதிரையின் கடிவாளத்தை இழுத்து வேறு திசைகளிலே சென்றிருக்கின்றேன்,'' என்று கூறினார்.

''ஆனால் மகனே, என்னுடைய வாள் வீசப்படக்கூடிய தூரத்திலே நீ அகப்பட்டிருந்தால், நான் உன்னைத் தப்பவிட்டிருக்க மாட்டேன். நாங்கள் சத்தியத்திற்காகவும் நீங்கள் அசத்தியத்திற்காகவுமாகப் போராடினோம். என் தந்தைப் பாசம் சத்தியத்தின் மீது நான் கொண்டிருந்த விசுவாசத்தை மீறுவதை நான் என்றும் அனுமதித்திருக்க மாட்டேன்'' என்று அபூபக்கர் (ரலி) அமைதியாகப் பதிலளித்தார்.

★



# சத்தியம்

## 11


புனிதராம் இறை தூதர் காலமானதும், இஸ்லாத்தின் தலைவராக அபூபக்கர் (ரலி) தேர்ந்தெடுக்கப் பட்டார். இஸ்லாம் என்னும் இளம் பொதுநல வமைப்பின் ஆட்சிப் பொறுப்பினை கலீபா அபூபக்கர் ஏற்றுக் கொண்டதும், அராபியாவின் கணிசமான பகுதியிலே புரட்சி தோன்றுவதாயிற்று. பெண்களிலும் மதுவிலும் அதிக நாட்டத்தினை வழக்கமாகக் கொண்டும், குலகோத்திரச் சண்டைகளில் ஈடுபட்டும் வாழ்ந்த பல்வேறு குலங்களையும் பகுதியாரையும் அல்லாஹ்வின் திருத்தூதர் தமது காந்தம் நிகர் ஆளுமையினாலும், இஸ்லாத்தை ஏற்று ஒழுகிய நெறியினாலும் ஒன்று படுத்தியிருந்தார்கள். அவர்கள் இஸ்லாத்தைத் தழுவியிருந்த காலம், இஸ்லாத்தைத் தழுவுவதற்கு முன் அவர்களிடமிருந்த பழக்க வழக்கங்களையும் பாவனைகளையும் மாற்றியமைப்பதற்குப் போதுமானதாக இருக்கவில்லை. எனவே, இறைதூதர் காலமான பிறகு பல்வேறு குலங்களும் புரட்சிக் கொடியைப் பறக்கவிட்டன. கலீபாவின் தலைப்பட்டினமாகத் திகழ்ந்த மதீனம் தாக்குதலுக்கு உள்ளாகக்கூடிய பயங்கரச் சூழ்நிலை உருவாகியது.

இந்தச் சமயத்தில் புரட்சியிலே கிளர்ந்தெழுந்த அராபியர் சிலர், தொழுகையின் எண்ணிக்கையைக் குறைக்கும்படியும், சக்காத் வரியை அகற்றும்படியும் ஒரு தூதினை அனுப்பி வைத்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிக அபாயமான சூழ்நிலை. இரும்பு மனிதராக விளங்கிய உமர்கூடச் சற்றுத் தளர்ந்து போகும்படி ஆலோசனை கூறினார்.

கலீபா அபூபக்கர் உறுதியைத் தளரவிடாது, "இவர்கள் சத்தியத்திலிருந்து விலகிவிட்டார்கள். அசத்தியத்துடன் எந்தக் காலமும் நான் சமாதானம் செய்து கொள்ளமாட்டேன். ஓர் ஒட்டகம் ஒட்டிக்குக் கொடுக்கக்கூடிய மதிப்பினைத்தானும் அவர்கள் எனக்குத் தராவிட்டாலும், நான் அவர்களுடன் கடைசிவரை போராடுவேன்," என்று கூறினார்.





# வசதி

## 12

கலீபாவாகத் தேர்ந்தெடுக்கப் படுவதற்கு முன், உமர் (ரலி) வியாபாரஞ் செய்வதின் மூலம் தமது சீவனோபாயத்தை நடத்தினார். விசுவாசிகள் அவரைக் கலீபாவாகத் தேர்ந்தெடுத்த பின்னர், பொதுத்திறைசேரியிலிருந்து அவருக்கு மாதாமாதம் குறிப்பிட்ட உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது.

ஹழரத் அலி, ஹழரத் உதுமான், ஹழரத் தல்ஹா முதலிய நாயகத் தோழர்கள் ஒன்று கூடி ஆலோசித்து, கலிபாவுக்கு வழங்கப்படும் உதவித் தொகையை அதிகரிப்பது எனத் தீர்மானித்தனர். ஆனால், இந்தத் தீர்மானத்தைக் கலீபாவுக்கு எடுத்துக் கூறத் துணிவு யாருக்கும் ஏற்படவில்லை.

கலீபாவுக்கு அளிக்கப்படும் உதவித் தொகையைக் கூட்டுவது சம்பந்தமான தீர்மானத்தினைக் கலீபாவுக்கு எடுத்துச் சொல்லும்படி ஹழரத் ஹப்ஸா (ரலி) வைக் கேட்டுக் கொண்டார்கள். அவர் விசுவாசிகளின் அன்னையாவர். அதே சமயம், அவர் கலீபா உமரின் மகளுமாவர்.

ஹப்ஸா நாயகியார் தமது தந்தையிடஞ்சென்று உதவித் தொகையைக் கூட்டுவதற்கு நபிதோழர்கள் ஆலோசித்திருப்பதை எடுத்துச் சொன்னார்.

இதனைக் கேட்டதுமே கலீபா உமர் கோபத்தின் வசப்பட்டார். "இந்தத் தீய யோசனையுடன் உன்னை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யார் இங்கு அனுப்பி வைத்தது?'' என்று கேட்டார். ஹப்ஸா மௌனஞ் சாதித்தார். ''அவர்களுடைய பெயர் எனக்குத் தெரியுமானால் தகுந்த தண்டனை கொடுப்பேன்'' என்று கலீபா சீறினார்.

பின்னர் அமைதியாக, ''மகளே, நமது பேரன்புக்குப் பாத்திரமான இறைதூதர் அணிந்த மிகச் சிறந்த ஆடையையும், அவர் அருந்திய மிகச் சிறந்த உணவையும், அவர் படுத்துறங்கிய மிகச் சிறந்த கட்டிலையும் நீர் உம் வீட்டிலேயே பார்த்திருப்பீர். அவர்களுடையதைப் பார்க்கிலும், என்னுடையவை தரக் குறைவானவையா?'' என்று கேட்டார்.

''இல்லை, தந்தையாரே, இல்லை''

''புனிதராம் இறைதூதர் வகுத்துத் தந்துள்ள வாழ்க்கை முறையிலும், தரத்திலும் இருந்து நான் சற்றேனும் பிறழமாட்டேன்,'' என கலீபா உமர் (ரலி) உறுதியுடன் கூறினார்.



## பாங்கு

## 13

கி. பி. 639 ஆம் ஆண்டிலே, சீரியாவில், பயங்கரமான கொள்ளை நோய் பரவியது. அந்த நோயினால் இருபத்தையாயிரம் மக்கள் மாண்டார்கள்.

மதீனாவிலிருந்த கலீபா உமருக்கு இந்தக் கொள்ளை நோயின் கேடு பற்றிய செய்தி கிடைத்ததும் மனம் மிக வருந்தினார். அவர் கோநகரிலிருந்து புறப்பட்டு, சீரியா சென்று தப்பியிருந்த மக்களுக்கு எல்லா வகையான உதவிகளும் அளிக்க முன் வந்தார். சீரியாவுக்கு கிறிஸ்தவ நகரான ஐலா ஊடாகவே செல்ல வேண்டும். சிறு கூட்டத்துடன் கலீபா ஒட்டகத்திலே பயணஞ் செய்தார். தம்மை மக்கள் அடையாளங் காண விரும்பாத கலீபா, நகரத்திற்குள் நுழையும் பொழுது தமது பணியாளுடன் இடத்தை மாற்றிக் கொண்டார்.

மகத்தான கலீபாவைக் காண வேண்டும் என்று ஆவல் கொண்டிருந்த மக்கள் வீதிகளிலே திரண்டு, ''கலீபா எங்கே?'' என்று கோஷமிட்டார்கள்.

''அவர் உங்களுக்கு முன்னால் வருகின்றார்,'' என இரு அர்த்தங்கள் பொருந்துமாறு பதிலளித்தார். ஒட்டகம் மெதுவாக முன்னேறியது. மக்கள் கூட்டத்தினர் கலீபா முன்னால் வந்து கொண்டிருக்கின்றார் என்ற நினைப்பில் இன்னும் முன்னாலே விரைந்தார்கள். இவ்வாறு மக்களுக்குத் தெரியாதவாறும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்யிலெறித்த பகல் பொழுதை கிறிஸ்தவ மேற்றிராணியாருடன் கழித்தார். கடின பயணத்தினால் அவருடைய மேற்சட்டை கிழிந்திருந்தது. அதனைத் தைப்பித்து எடுத்தார். புதிய கால நிலைக்குப் பொருந்தக் கூடிய புதிய மேற்சட்டை ஒன்றினை அன்பளிப்புச் செய்ய மேற்றிராணியார் முன்வந்தார். நன்றி கூறி, அதனை ஏற்க கலீபா உமர் மறுத்துவிட்டார், அவர் தன்னுடைய அங்கியையே அணிய விரும்பினார்.

இக்காலத்தில், பிலால் (ரலி) சிரியாவிலேயே வாழ்ந்து கொண்டிருந்தார்.

> 'அராபியாவில் நானே முதல் முஸ்லிம்
> ரூமிகளில் முதல் முஸ்லிம் ஸுஹைப்
> ஈரானியரில் முதல் முஸ்லிம் ஸல்மான்
> அபிஸீனியரில் முதல் முஸ்லிம் பிலால்'

என்று பெருமானாரே பிலால் (ரலி) பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள்.


பெருமானார் மக்காவிலிருந்து மதீனத்தை வந்தடைந்ததும், முஸ்லிம்களின் தொழுகைக்காக ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள். அந்தப் பள்ளிவாசலுக்கு 'மஸ்ஜிதுந் நபவி' என்று பெயர். இந்தப் பள்ளிவாசலின் முஅத்தினாக - இஸ்லாத்தின் முதல் முஅத்தினாக- பெருமானாரினாலேயே நியமிக்கப்பட்ட சிறப்பும் ஹழரத் பிலாலுக்கே வாய்த்தது.

ஆனால், பெருமானார் காலஞ் சென்றதும் அதான் என்ற தொழுகை அழைப்பினைக் கூற பிலால் விரும்பாது விலகிக் கொண்டார். பின்னர் சிரியாவுக்குச் சென்ற படையுடன் சென்று அங்கேயே தங்கிக் கொண்டார்.



கலீபா சிரியாவிலிருந்து புறப்படுவதற்குத் தயாரானார். டமஸ்கஸிலே வாழும் பிரமுகர்கள் பிலால் (ரலி) பாங்கு சொல்வதைத் தாங்கள் கேட்க விரும்புவதாகத் தெரிவித்தார்கள். கலீபாவினுடைய வேண்டுகோளை ஏற்று, கடைசி முறையாக பாங்கு சொல்ல பிலால் (ரலி) ஒப்புக் கொண்டார்.

பெரிய பள்ளிவாசலின் மேலே நின்று அந்தக் கிழவர் பாங்கு சொல்லத் தொடங்கினார். அவருடைய குரல் தெளிவாகவும், கம்பீரமாகவும் ஒலித்தது. இதனால், தினமும் பெருமானார் நடத்தும் தொழுகைக் காட்சியை பிலாலின் குரல் மிகத் தெளிவாக அவர்களுடைய நினைவுக்குக் கொண்டு வந்தது. அப்பொழுது உமர் (ரலி) உட்பட அநேக பலசாலிகளான வீரர்கள் நெஞ்சுருக வாய்விட்டே அழுதார்கள்.



## சபதம்


## 14

அஸ்னாதீனிலே ஹெராக்கிலியஸுடைய படை அராபியர்களுடைய படையிடம் படு தோல்வி அடைந்தது. எஞ்சியவர்கள் டமஸ்கஸுக்கு ஓட்டம் பிடித்தார்கள். அவர்களைப் பின் தொடர்ந்து சென்ற அராபியர்கள் நகரத்தைச் சுற்றி வளைத்துக் கொண்டார்கள். நகரத்தின் பாதுகாப்புக்கு தோமஸ் என்பவர் நியமிக்கப்பட்டார். அவர் ஓர் உயர்குடிக் கிரேக்கர். புகழ்வாய்ந்த தளபதி. ஒப்புயர்வற்ற வில்லாளி. அவருடைய கைத்திறன் மிகச் சிறந்த அராபிய வீரர்களைத் திணறடித்தது.

அபான் என்பவருடைய மனைவி, தமது கணவரை அந்தப் புனித யுத்தத்திலே பின் தொடர்ந்தார். அபான் போர்க்களத்திலே வீழ்ந்துபட்டார். மரணமாகிக் கொண்டிருந்த கணவனை அணைத்தவாறே, ''இனியரே, நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். நீங்கள் அல்லாஹ்விடம் செல்கின்றீர்கள். உங்களுடைய மரணத்திற்கு நான் பழிக்குப் பழி வாங்குவேன். அதன் பின்னர் நீங்கள் செல்லும் இடத்திற்கு நானும் வந்துவிடுவேன். ஏனெனில் நீங்களின்றி எனக்கு இங்கு வாழ்க்கை இல்லை இன்றிலிருந்து, வேறு எந்த ஆணும் என்னைத் தொடமுடியாது. ஏனெனில், என்னுடைய வாழ்க்கையை அல்லாஹ்வின் சேவைக்கே அர்ப்பணித்துள்ளேன்,'' என்று சபதமிட்டார்.

அழவில்லை, கண்ணீர் சிந்தவில்லை, தம்முடைய கணவருடைய பிரேதத்தை உரிய முறைப்படி கழுவி உரிய முறைப்படி அடக்கஞ் செய்தார். தன் கணவருடைய ஆயுதங்களை எடுத்துக்கொண்டு, கடுமையாக யுத்தம் நடைபெற்ற இடத்திற்குத் தமது கணவரைக் கொன்றவனைத் தேடி வந்தார். அவர் எய்த முதலாவது அம்பு தோமஸின் கொடியை ஏந்தியவனுடைய கையைத் துளைத்தது. அவர் தொடுத்த இரண்டாவது அம்பு தோமஸின் கண்ணைத் துளைத்தது.

இவ்வாறு அந்த இஸ்லாமிய மாது சிரோமணி தமது சபதத்தை நிறைவேற்றினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 15

ஹழரத் கான்ஸாஹ் புகழ் பூத்த பெண்பாற் புலவராகத் திகழ்ந்தார். அராபிய இலக்கிய விமர்சகர் அவருக்கு முன்னரும் பின்னரும் அவருக்கிருந்த புலமை தோன்றவில்லை என்று அபிப்பிராயப் படுகின்றனர். அவர் தமது குலத்தார் சிலருடன் மதீனாவுக்கு வந்து இஸ்லாத்தைத் தழுவிக் கொண்டார்.

கலீபா உமரின் ஆட்சிக் காலத்தில், தம்முடைய நான்கு மகன்களையும் அழைத்துக் கொண்டு கதிஷியாய் போருக்குச் சென்றார்.

போர் ஆரம்பமாவதற்கு முன்னர் அவர் தமது மகன்களை அழைத்துப் பின்வருமாறு கூறினார்.

''நான் உங்களை நொந்து பெற்றேன். மிகச் சிரமங்களை ஏற்று வளர்த்தேன். உங்களுடைய குடும்பத்திற்கும், உங்களுடைய குலத்தாருக்கும் எத்தகைய அபகீர்த்தியையும் நான் ஏற்படுத்தியதில்லை. உங்களுடைய தந்தையின் பெருமைக்கும் நான் எத்தகைய களங்கத்தையும் ஏற்படுத்தியதில்லை. உங்களுடைய தாயினுடைய நடத்தையின் புனிதத்திலே எத்தகைய மாசும் கற்பிக்கப்பட்டதில்லை. எனவே, நான் சொல்வதைக் கேளுங்கள். நமது மார்க்கத்தைப் பாதுகாக்கப் போராடுவது புனிதமானது என்பதை நினைவில் வைத்திருங்கள். துன்பங்களின் மத்தியிலேயும் பொறுமையைக் கடைப்பிடித்தல் பற்றிய திருக்குர்ஆனின் கூற்றை நினைவில் வைத்திருங்கள். நாளைக் காலையில் சுகத்துடனும் பலத்துடனும் எழுந்திருங்கள். அஞ்சாத துணிச்சலுடன் போரிலே கலந்து கொள்ளுங்கள். கடுமையாகப் போர் நடக்கும் இடத்திற்குச் செல்லுங்கள். மிகச் சிறந்த எதிரிகளுடன் போராடுங்கள். தேவை ஏற்படின் வீர மரணத்தைத் தழுவுங்கள்.''

அடுத்த நாள் போரிலே ஒருவர் பின் ஒருவராக அவருடைய மகன்கள் நால்வரும் கொல்லப்பட்டனர். இந்தச் செய்தி அந்த வீரத்தாயின் செவிகளை அடைந்ததும், தமது கரங்களை ஆகாயத்திற்கு உயர்த்தியவாறே, ''காருண்ய அல்லாஹ், வீரபுருஷர்களுடைய தாய் என்ற கௌரவத்தை எனக்கு அளித்ததற்காக நான் உனக்கு நன்றி செலுத்துகின்றேன்,'' என்றார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாகம்

16

ஹர்முஸான், பாரசீக மாகாணமான நஹவந்தின் தேசாதிபதியாகத் திகழ்ந்தான். இஸ்லாத்துக்கு எதிராகக் கடுமையாகப் போராடி வந்தான். முஸ்லிம்களுக்கும் பாரசீகருக்குமிடையில் ஏற்பட்ட போருக்கு அவனே பேரளவிற் காரணமாக இருந்தான். அடுத்து வந்த போர்களிலே அவன் மூர்க்கமாகப் போராடினுன்.

கடைசியில் ஹர்முஸான் கைது செய்யப்பட்டான். கடந்த காலங்களிலே அவன் முஸ்லிம்களுடன் கொண்டிருந்த தொடர்பு மிகவும் கசப்பானதாகும். எனவே, தான் அடிமையாக விற்கப்படலாம் அல்லது தூக்கு மேடைக்கு அனுப்பப் படலாம் என்றே அவன் எதிர்பார்த்தான். ஆனுல், அவனுக்கு அத்தகைய தண்டனைகள் அளிக்கப்படவில்லை. அவன் குறிப்பிட்ட வரி ஒன்றை கலீபாவுக்குச் செலுத்தியதும், சுதந்திர புருஷனுக விடப்பட்டான்.

அவன் மீண்டும் பெரும் படை ஒன்றைத் திரட்டிக் கொண்டு வந்து முஸ்லிம்களைத் தாக்கினுன். கடுமையான யுத்தத்தின் பின்னர் ஹர்முஸான் மீண்டும் கைது செய்யப்பட்டான். கலீபா உமர் தர்பாரில் அமர்ந்திருந்த சமயம், ஹர்முஸான் அவர் சமுகத்திற்குக் கொண்டு வரப்பட்டான். கைதி எந்தக் கணமும் சாவினை எதிர்பார்த்து அஞ்சி நின்ருன்.

உமர்: நஹவந்தின் புரட்சிக்கார தேசாதிபதி நீ தானே?

ஹர்முஸான்: ஆம்; நானேதான்.

உமர்: நீதான் முஸ்லிம்களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்களை மீறியவனு?

ஹர்: ஆம்.

உமர்: அத்தகைய குற்றத்திற்குத் தண்டனை மரணம் என்பதை நீ அறிவாயா?

ஹர்: எனக்குத் தெரியும்.

உமர்: சரி, அத்தண்டனையைப் பெற்றுக் கொள்ள நீ இக்கணமே ஆயத்தமாக இருக்கின்ருயா?

ஹர்: நான் தயார். நான் இறப்பதற்கு முன்னர் ஒரு வேண்டுகோள்.

உமர்: அது என்ன?

ஹர்: எனக்குத் தாகமாக இருக்கின்றது. ஒரு குவளை தண்ணீர் எனக்குக் கிடைக்குமா?

உமர்: நிச்சயமாக.

(கலீபாவின் ஆணைப்படி ஹர்முஸானுக்கு ஒரு குவளை தண்ணீர் கொண்டு வந்து கொடுக்கப்பட்டது.)

ஹர்: விசுவாசிகளின் தலைவரே! நான் தண்ணீரைக் குடித்துக்கொண்டிருக்கும் பொழுதே என்னுடைய தலை வெட்டப்படலாம் என நான் அஞ்சுகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உமர்: ஒரு பொழுதுமில்லை. இந்தத் தண்ணீரை நீ குடித்து முடிக்கும் வரை யாரும் உன் மயிரைத்தானும் தொடமாட்டார்கள்.

ஹர்: அமீருல் முஃமினீனே! நான் இந்தத் தண்ணீரைக் குடித்து முடிக்கும் வரை யாரும் என்னுடைய மயிரைக் கூடத் தொடமாட்டார்கள் என்று நீங்கள் வாக்குத் தந்திருக்கின்றீர்கள். நான் இந்தத் தண்ணீரைக் குடிக்க மாட்டேன். (தண்ணீரை நிலத்திலே ஊற்றி) எனவே, நீங்கள் என்னைக் கொல்ல முடியாது.

உமர்: (முறுவலித்தபடி) இது உன்னுடைய புதுமையான தந்திரம், இருப்பினும், உமர் தமது வாக்கினைத் தந்துவிட்டார். நீ சுதந்திரமாகப் போகலாம்.

இச் சம்பவம் நிகழ்ந்த சிறிது காலத்திற்குப் பின்னரும் ஹர்மூஸான் மீண்டும் மதீனாவுக்கு வந்தான். இந்தத் தடவை பெருந் தொகையானவர்களுடன் வந்தானாயினும், அவனுடைய நோக்கம் வேறாக அமைந்தது.

கலீபாவைப் பார்த்து அவன் வருமாறு சொன்னான்.

''அமீருல் முஃமினீனே! புதிய வாழ்க்கையை நாடியே நாங்கள் இங்கு வந்துள்ளோம். நாங்கள் இஸ்லாத்தை ஏற்றுக்கொள்ள எங்களுக்கு உதவி செய்யுங்கள்.''

☆



## ஆதாயம்

## 17

ஹழரத் அபூபக்கர் (ரலி) கலீபாவாக ஆண்ட காலத்தில் ஒரு பஞ்சம் ஏற்பட்டது. உணவுப் பண்டங்களுக்குத் தட்டுப்பாடு நிலவியது. மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அநுபவித்தார்கள்.

ஹழரத் உதுமான் (ரலி) ஓராயிரம் அலகு அளவுள்ள தானியத்தை மதீனாவுக்கு இறக்குமதி செய்தார்கள்.

மதீனாவில் வாழ்ந்த வியாபாரிகள் சிலர் தானியம் முழுவதையும் ஐம்பது சதவீத இலாபம் கொடுத்து வாங்க முன்வந்தார்கள். அதே சமயம் தாங்கள் அத்தானியத்தைப் பஞ்சத்தினால் அவதிப்படும் மக்களுக்கு விநியோகிப்பதற்காகவே வாங்குவதாகவும் கூறினார்கள்.

''எனக்கு ஆயிரம் சதவீதமான இலாபம் நீங்கள் தருவீர்களா?'' என உதுமான் (ரலி) கேட்க, ''இது சாத்தியமற்றது. அத்தகைய ஓர் இலாபத்தை எங்கிருந்து எதிர்பார்க்க முடியும்?'' என்றார்கள்.

''சரி, தேவைப்படுபவர்களுக்கு நான் இந்தத் தானியம் முழுவதையும் இலவசமாக விநியோகம் செய்யப் போகின்றேன். அல்லாஹ் எனக்கு ஆயிரம் மடங்கு இலாபத்தைத் தருவான் என்பதிலே எனக்கு எத்தகைய சந்தேகமும் கிடையாது.''

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்கை

## 18

பணிய மறுத்த அராபியர்களையும் கலீபா உமர் தமது உறுதியான ஆட்சியினால் அடக்கினார். இஸ்லாத்தின் அடுத்த கலீபாவாக உதுமான் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் எளிமை மிக்கவர். தாராள சிந்தை மிக்கவர். சமுதாயத்திலே கிளர்ச்சிக்காரர்கள் தோன்றுவதை அவர் அடக்கவில்லை. இந்தக் கிளர்ச்சிக்காரர்கள் கலகம் ஒன்றினை உருவாக்குவதற்கு சந்தர்ப்பம் ஒன்றினை எதிர்பார்த்து நின்றனர்.

தங்களுடைய தேசாதிபதியின் அடக்கு முறைகளைத் தாங்க மாட்டாதவர்களாக எகிப்தியர் கலீபா உதுமானுக்கு முறையிட்டார்கள். கலீபா மேற்படி தேசாதிபதியைப் பதவி நீக்கஞ் செய்தார். வேலை நீக்கஞ் செய்யப்பட்ட அந்த உத்தியோகத்தரைச் சுற்றிச் சதி வலை ஒன்று பின்னப்படுவதாயிற்று. அதிருப்தி அடைந்திருந்த ஏனையோரும் அவனுடன் சேர்ந்துகொண்டார்கள். இவ்வாறு கரேஜி கட்சி உருவாக்கப்பட்டது. கரேஜிக் கட்சியினர் கலீபாவின் ஆட்சியை எதிர்ப்பதெனத் தீர்மானித்தனர்.

ஒரு சரியான சந்தர்ப்பத்திலே கரேஜிக்காரர்கள் கலீபாவின் வீட்டினை முற்றுகையிட்டனர். மதீனத்திலே வாழ்ந்த முஸ்லிம் தலைவர்களை இச்செயல் வருத்தியது. அவர்கள் தூதுவர் ஒருவரைக் கலீபாவின் சமுகத்திற்கு அனுப்பி வைத்தனர்.

அவர் கலீபாவிடம் பின்வருமாறு கூறினார்: ''அமீருல் முஃமினீனே! எங்களுடைய உயிரையும் சொத்துக்களையும் பணயம் வைத்து இறை தூதருக்கு உதவி செய்தோம். தங்களுக்கு முன்னர் ஆட்சி செலுத்திய இரண்டு கலீபாக்களும் எங்களுடைய உதவியைப் பெற்றார்கள். அதேபோன்ற காழ்ப்பற்ற உதவியைத் தங்களுக்கும் தர நாங்கள் ஆயத்தமாக உள்ளோம், உத்தரவிடுங்கள், இந்த உலகத்தில் முகத்திலிருந்து கரேஜியர்களை அழித்துத் துடைத்து எறிகின்றோம்.''

இந்தத் தூது கலீபா உதுமானுக்கு மிகுந்த ஏக்கத்தை அளித்தது. உடனே, ''இல்லை. அத்தகைய உத்தரவு ஒன்றினை நான் எப்பொழுதும் பிறப்பிக்கவே மாட்டேன். 'முஸ்லிம்களுக்கிடையிலேயே யார் முதலிலே கலகத்தைத் தூண்டிவிட்டு, அதனால் இரத்தப் பெருக்கினை ஏற்படுத்துகின்றானோ அவன் செய்கின்ற பாவம் முழு உலகத்திலும் சேமிக்கப்பட்ட பாவத்திலும் பார்க்க மிகவும் அதிகமாகும். அந்த முதல் முஸ்லிமாக நான் இருக்க விரும்பவில்லை. உங்களுடைய வாள்களை மீண்டும் உறைகளிலே போட்டுக் கொள்வீர்களானால், நீங்கள் உண்மையில் என் நண்பர்களாக நடந்து கொள்வீர்கள்,'' என கலீபா பதிலளித்தார்.


அத்தலைவர்கள் மிகுந்த அச்ச உணர்வு கொண்டிருந்தார்களெனினும், கலீபாவின் விருப்பப்படி நடந்தார்கள். சிலர் கலீபாவினுடைய வாசலைக் காவல் செய்யத் தொடங்கினார்கள். ஆனாலும் அவர்களாலே கலீபாவைக் காப்பாற்ற முடியவில்லை.

ஒரு நாள் இரவு கரேஜியர்கள் இருவர் வீட்டின் பின்புறச் சுவரேறிக் குதித்து, கலீபா உதுமானின் நெஞ்சிலே பெரிய கத்தி ஒன்றினைப் பாய்ச்சினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கலீபாவுக்கு மரண காயம் ஏற்படுத்தப்பட்டது. அவர் விரைவாகத் தமது பலத்தை இழந்து கொண்டிருந்த போதிலும், ஆகாயத்தைப் பார்த்து, அமைதியான தெளிவான குரலில், ''கருணையுள்ள அல்லாஹ்! என் கொலைக்குப் பதிலாக, என்னுடைய மக்களுடைய ஐக்கியப் பிணைப்பினை மேலும் பலப்படுத்துவாயாக!'' என இறைவனைப் பிரார்த்தித்தார்.





# அறிவு

## 19

ஒரு சமயம் பத்து அறிவாளிகள் கலீபா அலி (ரலி) யிடம் வந்து, ''தங்களிடம் ஒரு கேள்வியைக் கேட்பதற்கான அனுமதியைக் கோருகின்றோம்,'' என்றார்கள்.

''உங்களுக்குப் பூரண உரிமை இருக்கின்றது,'' என்று கலீபா அலி (ரலி) பதிலளித்தார்கள்.

''அறிவிலும், செல்வத்திலும் எது சிறந்தது; ஏன்? தயவு செய்து எங்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனியே வெவ்வேறு பதில்கள் தர வேண்டும்,'' என அவர்கள் கேட்டுக் கொண்டார்கள்.

கலீபா அலி (ரலி) பின்வரும் பத்து பதில்களையும் அவர்களுக்குக் கூறினார்கள்.

(1) அறிவென்பது இறை தூதர்களின் மரபுரிமைச் சொத்து. செல்வம் அரசர்களுடைய வழிவழிச் சொத்து. எனவே, அறிவு செல்வத்திலும் பார்க்க மேலானது.

*

(2) நீங்கள் செல்வத்தைப் பாதுகாக்க வேண்டும்; ஆனால் அறிவு உங்களைப் பாதுகாக்கின்றது. எனவே, அறிவு சிறந்தது.

*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(3) செல்வத்தை உடைய ஒருவனுக்கு அநேக எதிரிகள் இருப்பார்கள்; அறிவை உடையவனுக்குப் பல நண்பர்கள் இருப்பார்கள். எனவே, அறிவு சிறந்தது.

*

(4) அறிவு சிறந்தது. ஏனெனில் அறிவினை விநியோகிக்கும் பொழுது அது பெருகுகின்றது, ஆனால், செல்வத்தை விநியோகிக்கும் பொழுது அது குறைகின்றது.

*

(5) அறிவாளி பெருந்தன்மையுடன் நடந்து கொள்பவராகவும், செல்வந்தன் கஞ்சத்தனத்துடன் நடந்து கொள்பவராகவும் காணப்படுவதால் அறிவு சிறந்தது.

*

(6) அறிவு திருட்டுப் போக மாட்டாது; செல்வம் திருட்டுப் போகும், எனவே அறிவு சிறந்தது.

*

(7) காலத்தின் ஓட்டத்திலே அறிவு பழுதடைவதில்லை. ஆனால், கால ஓட்டத்திலே செல்வம் துருப்பிடித்துத் தேய்கின்றது. எனவே, அறிவு சிறந்தது.

*

(8) அறிவு எல்லையற்றது. செல்வத்திற்கு எல்லையுண்டு. அதனைப் பற்றிக் கணக்கு வைத்துக் கொள்ளலாம். எனவே, அறிவு சிறந்தது.

*



(9) அறிவு மனத்தினைப் பிரகாசப்படுத்துவனாதிலும் செல்வம் மனத்தினை இருளடையச் செய்வதினாலும் அறிவே சிறந்தது.

*

(10) அறிவே சிறந்தது. ஏனெனில், அறிவு நமது இறைதூதருக்கு அருளிரக்கத்தினை ஊட்டியது. இறைவனை நோக்கி, ''அல்லாஹ், உன்னை நாங்கள் துதிக்கின்றோம்; நாங்கள் உன்னுடைய ஊழியர்கள்'' என்று பெருமானார் கூறினார்கள். ஆனால், மிகுந்த செல்வத்தை அநுபவித்த மன்னர்கள் தற்பெருமை வசப்பட்டுத் தங்களையே கடவுட் தலைவர்களாகப் பிரகடனப் படுத்தினார்கள்.

*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 20

ஒருசமயம் அலீ (ரலி) இஸ்லாத்துக்கு விரோதமான குலத்தாருடன் கடுமையான போரிலே ஈடுபட்டிருந்தார். எதிரிகள் மத்தியிலே காணப்பட்ட அஞ்சா நெஞ்சினஞன வீரன் ஒருவன், போராடி முன்னேறி அலீயைத் தாக்கத் துவங்கினன். பயங்கரச் சண்டை ஒன்று இருவருக்குமிடையில் நிகழ்ந்தது. கடைசியில் எதிரியினுடைய வாள் உடைந்து தூளாகியது. அவன் எவ்வித பாதுகாப்புமின்றி நின்றான். இதனைப் பார்த்த அலி தம்முடைய வாளை உபயோகிக்கவில்லை. எதிரியின் நிராயுதபாணியான நிலையைத் தமக்குச் சாதகமாக்கிக் கொள்ள அலீ (ரலி) விரும்பவில்லை.

அலீ (ரலி) க்கு முன்னல் நின்ற அந்த எதிரி சற்றும் பயப்படாமல், ''ஓ, அலி! நான் ஓடமாட்டேன். நான் தொடர்ந்து சண்டை போடுவதற்கு எனக்கு ஒரு வாள் தாரும்,'' என்று கேட்டான்.

ஒரு கணமேனும் தயங்காது, அலீ (ரலி) தமது வாளையே எதிரிக்குக் கொடுத்தார். அவரிடம் மேலதிக வாள் எதுவும் இருக்கவில்லை. எதிரி திகைத்துப் போனன். பேச்சு மூச்சற்றுச் சில விநாடி நேரம் அப்படியே நின்றான்.

''ஓர் எதிரிக்கு இத்தகைய ஒரு பயங்கரமான முறையிலே ஒரு பரிசினைத் தர எவ்வாறு துணிந்தீர்கள்?'' என்று அவன் கேட்டான்.

அலீ முறுவலித்தவாறு, ''என்னல் வேறு எதைத் தான் செய்ய முடியும்? என்னிடம் யார் எந்தப் பரிசினைக் கேட்டாலும், என்னல் மறுக்க முடியாது,'' என்றார்.

''இத்தகைய ஒரு மனிதன் முஹம்மது (ஸல்) அவர்களின் நம்பிக்கையாளனக இருக்கும் பொழுது, அவருடைய போதனையை மறுதலிக்க நான் யார்? உங்களுடைய பெருந்தன்மைக்கும் வீரத்திற்கும் முன்னல் நான் மண்டியிடுகின்றேன். உங்களுடைய எதிரிகளை வெற்றி கொள்வதற்கு உங்கள் மீது அல்லாஹ் அருள் பாலிப்பானக!'' என்று அந்த எதிரி கலீபா அலீ (ரலி) யை வாழ்த்தினன்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 21

நூறு போர்களின் ஒப்பற்ற வீரரான கலீபா அலீ (ரலி) முஸ்லிம் சாம்ராஜ்யத்தின் உயர் தலைவராக விளங்கினார். ஆனால், அவருடைய கவசம் திருட்டுப் போய்விட்டது. இத்தகைய ஓர் அறிவற்ற குற்றத்தை யார் செய்திருக்கலாம் என்று எல்லோரும் அதிசயப்பட்டார்கள். கடைசியாக அந்தக் கவசம் ஒரு யூதனிடம் இருக்கக் காணப்பட்டது. அலீ (ரலி) கவசத்தைத் திருப்பித் தரும்படி கேட்டார்.

''இது என்னுடைய கவசம்; இதனை நானே வைத்திருப்பேன்,'' என வெடுக்கென்று யூதன் பதிலளித்தான்.

அந்த யூதனின் துடுக்கான பதிலைக் கேட்டு கலீபாவின் தோழர்கள் கொதித்தார்கள். ''இந்த மூடன் 'சிங்க'த்திற்கு அல்லவா சினமூட்டுகின்றான்?'' என்று நினைத்துக் கொண்டார்கள்.

அலீ சிங்கமாயினும், அவர் அல்லாஹ்வின் சிங்கம். எனவே, அவர் தோழர்களைப் பார்த்து ''நீங்கள் என்னுடைய அந்தஸ்தினை நினைத்துப் பார்க்கக் கூடாது. சட்டத்தின் கண்களிலே அரசனும் அவனுடைய பிரஜைகளும் சமனே. தேவை ஏற்படின் கலீபா நீதி மன்றத்தின் பாதுகாப்பினை நாடுதல் வேண்டும்,'' என்றார்.

அலீயினுடைய தலைநகர் கூபாவாகும். புகழ் பூத்த நீதிபதி ஷாரிஹ் அவர்களே கூபா நகரின் நீதிபதியாக விளங்கினார். அவரை அந்தப் பதவியில் அலீயே நியமித்திருந்தார். அலீ ஷாரிஹின் நிதிமன்றத் துணையினை நாடினார்.

நீதிமன்றத்திலே ஆஜராகும்படி அந்த யூதன் அழைக்கப்பட்டான். நீதி மன்றத்திலே பெருந் தொகையான மக்கள் கூடியிருந்தார்கள். விசாரணை ஆரம்பமாயிற்று. நீதிபதி தமது ஆசனத்தில் அமர்ந்தார். அலீ கூட்டத்தை விலத்திச் சென்று, நீதிபதிக்கு உரிய முறையிலே மரியாதை செலுத்தினார். ஆனால், நீதிபதி தன் ஆசனத்திலிருந்து எழவோ, கலீபாவுக்கு மரியாதை செலுத்தவோ இல்லை.

நீதிபதி: நீ அலீயினுடைய கவசத்தைக் களவெடுத்தாயா?

யூதன்: இல்லை. எனக்கு எதிராகப் பொய்யான குற்றச்சாட்டுக் கொண்டு வரப்பட்டுள்ளது. கவசம் என்னுடையது. அது என்னிடமே இருக்கின்றது.

நீதிபதி: (அலீயைப் பார்த்து) கவசம் உம்முடையது என்பதை நிரூபிப்பதற்குச் சாட்சிகள் யாராவது உண்டா?

அலீ: ஆம்; என் மகன் ஹஸனும் என் பணியாள் குயம்பரும் என் சாட்சிகள்.

நீதிபதி: அவர்களுடைய சாட்சியத்தில் என்னால் நம்பிக்கை வைக்க முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அலீ: ஏன்? அவர்கள் பொய்ச்சாட்சி கூறுவார்களென நீங்கள் கருதுகின்றீர்களா?

நீதி: ஒரு போதும் இல்லை. நீர் இறைதூதரின் நெருங்கிய உறவினர் என்பதையும், மிகவும் ஒழுக்கசீலர் என்பதையும், நான் அறிவேன். மேலும் சுவர்க்கத்தின் வாசல் உங்களுக்காகத் திறந்திருக்கிறது என்பதைக்கூட நான் நம்புகின்றேன். ஆனால், மகனின் சாட்சியத்தைத் தந்தைக்குச் சாதகமாகவும், பணியாளின் சாட்சியத்தை ஏஜமானனுக்குச் சாதகமாகவும் ஏற்றுக் கொள்ளக்கூடாது என்று பெருமானார் விதித்துள்ளார்கள். எனவே, போதுமான சாட்சியங்கள் இல்லாத படியால் நீர் தாக்கல் செய்த வழக்கினைத் தள்ளுபடி செய்கின்றேன்.

யூதன்: (அலீயிடம் சென்று கொண்டே): அற்புதம், முன்னரெப்பொழுதும் நடவாதது, கற்பனைக்கு அப்பாற்பட்டது. கலீபா என்ற அந்தஸ்தினைக்கூட மதிக்கக்கூடாது என்பது ஒப்பற்ற சட்டமாகும். அந்தச் சட்டத்தினை விதித்தவர் ஒரு சாதாரண மனிதராக இருக்க முடியாது. அவர் உண்மையில் இறைதூதராகவே இருக்க வேண்டும். அமீருல் முஃமினீனே! இந்தக் கவசம் உண்மையில் உங்களுடையது. தயவு கூர்ந்து ஏற்றுக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து என் உடல், என் உள்ளம், என் விசுவாசம் எல்லாம் உங்களுடையதே. 'அல்லாஹ்வைத் தவிர ஆண்டவன் இல்லை; முஹம்மதுவே அவனுடைய திருத்தூதர்.'

★



# நோக்கு

## 22

கலீபா அலீயின் மரணத்திற்குப் பின்னரும், ஹஸனின் பதவி துறப்புக்குப் பின்னரும், முஆவியா இஸ்லாமிய உலகின் தலைவரானார். நுண்மதியாலும், களைப்பற்ற உழைப்பாலும், மிகுந்த கற்பனையாலும் தமக்கு எதிராகத் தோன்றிய எதிர்ப்புக்களை எல்லாம் முறியடித்தார். ஆனாலும், காலஞ் சென்ற அலீயையும், அவருடைய மகன்களையும் அவர் நடத்திய முறையைச் சிலர் அங்கீகரிக்கவே இல்லை.

அத்தகையவர்களுள் மதீனாவில் வாழ்ந்த தருமா என்ற கிழவியும் ஒருத்தி, அவளுடைய கூர்மை நாக்கிற்கு எல்லோரும் பயந்தார்கள். ஒருநாள் முஆவியா அக் கிழவியை அழைத்துப் பேசினார். அப்பொழுது பின்வரும் உரையாடல் இடம் பெற்றது:

மு: நீ மார்க்க நெறியுள்ள, புத்திசாதுரியமுள்ள ஒரு பெண்ணென்று நான் கேள்விப் படுவது உண்மையா?

த: அந்தத் தகவலை நான் தரவில்லை. எனவே, அதனை நிரூபிக்க வேண்டிய சுமை என்மீது சுமத்தப்படவும் இல்லை.

மு: நீ அலீயினுடைய தடித்த ஆதரவாளர் என்பது உண்மையா?

த: ஆம்; அப்படித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மு: ஏன்?

த: ஏனெனில் அவர் நீதியைக் கௌரவித்தார். ஒழுக்கசீலரை அவர் மதித்தார். ஏழைகள்மீது அநுதாபங் கொண்டார்.

மு: என்னை நீ ஆதரவாக நோக்கவில்லை என்று கூறப்படுவதும் உண்மையா?

த: ஆம்; அஃது உண்மை.

மு: ஏன்?

த: ஏனெனில், நீர் மனிதனிலும் பார்க்க உம்முடைய இராஜ்யம் பெரிது எனக் கருதுகின்றீர்.

மு: அலீ என்ன செய்தார்?

த: ஆளும் அதிகாரத்தினை மனிதனுக்குத் தொண்டு செய்வதற்கான உபயோகமுள்ள கருவியாகவே அவர் ஏற்றார்.

மு: அதனை விடு. நான் உனக்கு ஏதாவது நன்மை செய்யலாமா?

த: குறிப்பாக எதுவும் இல்லை. உமக்கு விருப்பமாயின் ஒரு சிவத்த ஒட்டகத்தையும், அதனுடன் ஒட்டகமோட்டும் சிறுவனையும் எனக்குத் தரலாம்.

மு: சரி. உன் வருணனைக்குப் பொருந்தும் ஒட்டகத்தையும், அதனுடன் ஒட்டகமோட்டும் சிறுவனையும் உனக்குத் தர நான் ஆயத்தமாக இருக்கின்றேன். நான் அலீக்குச் சமமானவன் என்பதை ஏற்றுக் கொள்ளுகின்றாயா



த: நிச்சயமாக இல்லை.

மு: சரி. என்னை அலீக்குச் சமமானவன் என்று நீ கருதாததை நான் பாராட்ட வில்லை. உன்னுடன் நான் நேயம் பாராட்ட விரும்புகின்றேன். வீட்டுக்குச் செல். நூறு ஒட்டகங்களும், அவற்றைப் பராமரிக்கத் தேவையான சிறுவர்களையும் இன்றே உன் வீட்டுக்கு அனுப்பி வைக்கின்றேன். ஆனால், அலி இன்று உயிருடன் இருந்தால் உனக்கு ஒட்டகம் ஒன்றைத்தானும் தருவதற்கு உடன்பட்டிருக்க மாட்டார்.

த: ஒட்டகத்தைப் பற்றிப் பேச வேண்டாம். பொது நிதியிலிருந்து அவர் ஓர் எலியைத்தானும் கொடுத்திருக்க மாட்டார்.

மு: அப்படியாயின், இவற்றை ஏன் நீ என்னிடமிருந்து கேட்டாய்?

த: அலீயுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் பொழுது நீ எவ்வளவு தாழ்ந்தவன் என்பதைப் பார்ப்பதற்காகவே கேட்டேன்.

அவ்விடத்தில் மௌனப் பெருமோனம் புகுந்தது. முஆவியாவுக்குப் பேச நா எழவில்லை. வெளியுலகம் அவர் பார்வையிலிருந்து மங்கியது. தம்முடைய கடந்த கால நடவடிக்கைகளை அவர் தம் மனத்திற்குள் மறு விசாரணை செய்ய ஆரம்பித்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பு

## 23

மூன்றாவது சிலுவை யுத்தம் நடை பெற்றுக் கொண்டிருந்தது. கிறிஸ்தவப் படைக்கு 'இரும்பு நெஞ்சினன்' என்றழைக்கப்பட்ட இங்கிலாந்தின் மன்னனான றிச்சட் தலைமை தாங்கினான். றிச்சட் குதிரையேறிய வீரர்கள் சகிதம் மிகுந்த சினத்துடன் இஸ்லாமியப் படையைத் தாக்கிக் கொண்டிருந்தான். கடுமையான போரின் மத்தியிலே றிச்சட்டினுடைய குதிரை கொல்லப்பட்டது. தரையில் நின்று போராட வேண்டிய நிலைக்கு உள்ளானான். அப்பொழுது மிக உயர்ந்த அராபிய போர்க் குதிரை ஒன்றுடன் துருக்கிய வீரன் ஒருவன் சடுதியாக றிச்சட் முன் தோன்றினான்.

'சுல்தான் இந்தக் குதிரையை உங்களுக்கு அன்பளிப்பாக அனுப்பி வைத்துள்ளார். தூரத்திலிருந்து அவர் உங்களுடைய நிலையைப் பார்த்துள்ளார். உங்களைப் போன்ற துணிவுள்ள ஒரு போர்வீரன் தரையில் நின்று சண்டை பிடிக்க நேர்ந்ததை அவமானமென எங்கள் சுல்தான் கருதுகின்றார்,'' என்று கூறி அக்குதிரையைக் கொடுத்தான். றிச்சட்டும் அதனை ஏற்றுக் கொண்டான். சண்டை தொடர்ந்து நடைபெற்றது.

பிற்பகலானதும் முஸ்லிம் போர்வீரர்கள் திரும்பினார்கள். கிறிஸ்தவப் படை வெற்றி பெற்றது போன்ற நிலைமை நிலவியது.

மோஸுல், எகிப்து, சீரியா போன்ற இடங்களிலிருந்து புதிய படைகளைச் சுல்தான் சலாஹுதீன் தருவித்து, புதிய தாக்குதல் ஒன்றுக்குச் சகல ஆயத்தங்களையும் செய்து முடித்திருந்தார்.

அப்பொழுது றிச்சட் மிகவும் நோய்வாய்ப்பட்டுள்ளான் என்பதைச் சுல்தான் அறியலானார். சுல்தான் தமது தாக்குதலைப் பிற்போட்டு வைத்தார். தணலாக எரிக்கும் நோயினாலே தவித்த றிச்சட் குளிர்ந்த பழங்களுக்காக ஏங்கினான். அவனை எதிரி என்று பாராட்டாது, அவனுக்குத் தேவையான பழங்களையும், பனிக் கட்டிகளையும் சுல்தான் ஒழுங்காக அனுப்பிக் கொண்டிருந்தார்.

இடையிலே யுத்த நிறுத்த ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்தாகியது. அதன் பிரகாரம் மூன்று ஆண்டுகள் யுத்தத்தை நிறுத்துவதென முடிவாயிற்று.

இங்கிலாந்து செல்வதற்காகக் கப்பலில் ஏறிய றிச்சட், சுல்தான் சலாஹுதீனுக்கு, ''மூன்றாண்டு யுத்த நிறுத்தக் கெடு முடிவடைந்ததும் ஜெருசலத்தை மீட்பதற்கு மீண்டும் வருவேன்'' என்று செய்தி அனுப்பிவைத்தான்.

''நான் உன்னை வரவேற்பதற்கு பூரண தயாராக உள்ளேன். நான் ஜெருசலத்தை இழப்பதாக இருந்தால், உன்னைப் போன்ற ஒருவனைத் தவிர்ந்த வேறு ஒருவனிடம் இழக்கத் தயாராக இல்லை'' என்று சுல்தான் பதில் அனுப்பி வைத்தார்.

'யுத்தத்தின்போது நாகரிக உயர்பண்பு, பெருந்தன்மை, சகிப்புத்தன்மை, உண்மையான வீரம், மென்மையான கலாசாரம் ஆகியன முஸ்லிம் வீரர்களிடமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காணப்பட்டன என்பதைச் சிலுவை யுத்தத்தைப் பற்றிக் கற்கும் மாணாக்கருக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டிய தேவையே இல்லை' என்று சரித்திர ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றார்கள்.



# மன்னிப்பு

## 24

ஒரு சமயம், கலீபா மஹ்தியின் ஆட்சிக் காலத்தில், ஓர் ஏழைப் பெண் கலீபாவினுடைய அந்தப்புரத்திற்கு வந்தாள், கதவைத் தட்டினாள். மிகத் துன்பப்படுவதாகத் தோன்றும் ஏழைப் பெண் ஒருத்தி நின்றாள். அவளைச் சந்திப்பதற்குக் கனிவார்ந்த ராணியார் சம்மதித்தார்.

ராணியாருக்குக் கொடுக்க வேண்டிய மரியாதைகளை அந்த ஏழை செலுத்திய பின்னர், உமய்யா கலீபாக்களிலே கடைசி மன்னருடைய மகள் நான். உங்களை நான் பார்க்க வந்ததின் நோக்கம்......'' எனக் கூறத் தொடங்கினாள்.

அவள் தன் வாக்கியத்தை முடிப்பதற்கிடையிலேயே ராணியார் மிகுந்த கோப வசப்பட்டு, ''உன்னுடைய குடும்பத்தார் அதிகாரத்தில் அமர்ந்திருந்த பொழுது, எங்களுடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களுக்கு இழைக்கப்பட்ட மிகக் கொடூரமான அநீதிகளை அதற்கிடையில், இவ்வளவு விரைவாக மறந்து போனாயா?'' என்று கத்தினார்.

ஏழைப் பெண், ராணியார் கூறியவற்றை அமைதியுடன் கேட்டுக் கொண்டிருந்தாள். பின்னர் கசப்பான முறுவலுடன், ''இன்று நீங்கள் இருப்பதைப் போன்றே நானும் அன்று கர்வமுள்ளவளாக இருந்தேன். ஆனால், அல்லாஹ் என்னுடைய கர்வத்தை அடக்கிவிட்டான். நான் இன்றுள்ள நிலையை உங்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுடைய கண்களாலேயே பார்க்கக் கூடியதாக இருக்கின்றது. நாங்கள் ஒரு காலத்திலே செய்த அதே தவறுகளைத் திருப்பிச் செய்வதின் மூலம், இதே போன்ற ஒரு நிலை உங்களுக்கும் ஏற்படவேண்டும் என நீங்கள் வருந்தி அழைக்கின்றீர்களா?'' எனக் கேட்டாள்.

இவ்வாறு கூறி அந்த ஏழைப் பெண் சென்று விட்டாள். அந்த வார்த்தைகள் ராணியாரின் நெஞ்சை ஆழமாகத் துளைத்தன. ஒரு கணத்திலே ராணியாருக்குப் புத்தித் தெளிவு ஏற்பட்டது. ஓடிச் சென்று, அந்த ஏழைப் பெண்ணை அணைத்துக் கொண்டார்.

''நான் ஏழை; ஆதரவற்றவள்; கந்தல் துணியிலே இருக்கின்றேன். உங்களைப் போன்ற உயர்ந்த அந்தஸ்திலே உள்ள ஒருவரின் அணைப்பிற்கு அருகதையற்றவள்'' என அவள் கூறினாள்.

உடனே ராணியார் தமது பணிப் பெண்களை அழைத்து, ''இந்தப் பெண்ணைப் பன்னீரிலே குளிப்பாட்டுங்கள். மிகச் சிறந்த ஆடைகளை அணியக் கொடுங்கள். மிக உயர்ந்த உணவுகள் அடங்கிய விருந்துக்கு ஏற்பாடு செய்யுங்கள்,'' எனக் கூறினார்.

அக்கட்டளை நிறைவேற்றப்பட்டது. ராணியாரும் அப்பெண்ணும் ஒரே சகனிலேயே இரு சகோதரிகளைப் போல விருந்துண்ணத் துவங்கினார்கள்.



# எழுத்து

## 25

அப்பாஸிய்யாக் கலீபாவினுடைய செயலாளர் ஒருவர் எகிப்திய தேசாதிபதி ஒருவருக்கு நிருபம் ஒன்று எழுதிக் கொண்டிருந்தார். மௌனமாகவும் அமைதியாகவும் சிந்தனைக் கடலிலே மூழ்கி, முத்தைப் போன்ற உயர் வசனங்களை, தண்ணீர் போன்று பாய்ந்து செல்லும் நடையிலே எழுதிக் கொண்டிருந்தார்.

அப்பொழுது அவருடைய பணிப்பெண் அவர் அமர்ந்திருந்த அறைக்குள் சடுதியாகப் புகுந்து, ''ஐயா, வீட்டிலே மாவு இல்லை'' என அறிவித்தாள். இந்த எதிர்பாராத இடைத் தடையினாலே தடுமாற்றமடைந்த செயலாளர், சிந்தனைத் தொடர் அறுபட, ஞாபக மறதியாக ''ஐயா, வீட்டிலே மாவு இல்லை'' என்ற வசனத்தையும் அந்த நிருபத்தில் எழுதி விட்டார்.


நிருபம் எழுதி முடிக்கப்பட்டதும், அது கலீபாவிடம் சமர்ப்பிக்கப்பட்டது. ''ஐயா, வீட்டிலே மாவு இல்லை'' என்ற வசனம் இடையிலே ஏன் புகுந்தது என்பது கலீபாவுக்கு விளங்கவில்லை. எனவே, அவர் தமது செயலாளரை அழைத்து விசாரித்தார். செயலாளர் தமது செயலுக்கு வெட்கப்பட்டாரெனினும், நடந்தவற்றை உண்மையின் பிரகாரம் கூறினார்.

கலீபா அந்த நிருபத்தை மீண்டும் ஒரு தடவை வாசித்துப் பார்த்த பின்னர், ''நிருபத்தின் முற்பகுதி சொற்சிறப்பிலும் வசனக் கட்டிலும் பிற்பகுதியைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்க்கிலும் எவ்வளவோ சிறந்து விளங்குகின்றது. உம்மைப் போன்ற ஆற்றலுள்ள எழுத்தாளர், வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளினாலே துன்பப்படுதல் ஆகாது,'' என்று கூறினார்.

அன்றாடத் தேவைகள் செயலாளரை வருத்தாத வகையிலே, கலீபா அவருக்குத் தாராள வசதிகள் செய்து கொடுத்தார்.







## 26

பதினோராம் நூற்றாண்டின் முற்பகுதியில், சகாராப் பாலைவனத்தில் வாழும் பர்பர் குலத்தாரின் தலைவன் மக்காவுக்குச் செல்லும் புனித யாத்திரையினாலே கவரப்பட்டு, தம்முடைய நாட்டிலும் இஸ்லாம் பரப்பப்படுதல் வேண்டும் என்று தீர்மானித்தான். வட ஆபிரிக்காவிலுள்ள கற்றறிந்த மார்க்க மேதைகளைத் தமது நாட்டிற்கு வந்து இஸ்லாத்தைப் போதிக்கும்படி வேண்டுதல் விடுத்தான். சகாராப் பாலைவனத்தின் ஆபத்துக்களைப் பற்றிக் கேள்விப்பட்ட மார்க்க மேதைகள் தயங்கினார்கள், ஆனால் ஒழுக்க சீலரான அப்துல்லாஹ் பின் யாஸீன் என்ற மார்க்க மேதை இந்தப் புனித பணியை மேற்கொள்ள முன்வந்தார்.

இஸ்லாம் மதத்தை ஏற்றுக்கொண்டவர்கள் கூட, மார்க்க அநுஷ்டானங்களைப் பெரிதும் புறக்கணித்து, எல்லாவகையான தீய ஒழுக்கங்களிலும் ஈடுபட்டிருப்பதை அப்துல்லாஹ் கண்டார், அவர்களை மீண்டும் சரியான பாதைக்குக் கொண்டுவருவதற்கு அவர் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அவருடைய நடவடிக்கைகளுக்கு ஆதரவு கிட்டவில்லை.

இதனால் சலிப்புற்ற அவர், விசுவாசமான சிலரை அழைத்துக் கொண்டு, செனகல் நதியிலுள்ள ஒரு தீவுக்குச் சென்றார். அங்கு சமய நோன்பினருக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்விடம் அமைத்து, மார்க்கக் கடமைகளைத் தீவிர மாகக் பயிலப்படுவதாயிற்று.

தங்களுடைய தீய செயலால் மார்க்க மேதை பிரிந்து சென்றார் என்ற குற்ற உணர்வு, பர்பர் குலத் தார் பலரை உறுத்தலாயிற்று. அவர்கள் அப்துல் லாஹ் தங்கியிருந்த தீவுக்குச் சென்று, அவருடைய மன்னிப்பினைப் பெற்று, இஸ்லாம் காட்டிய வழியை ஒழுகலாயினர். இவ்வாறு அவரைப் பின்பற்றுபவர் களுடைய தொகை விரைவிலேயே ஓராயிரமாகப் பெருகியது.

காலம் பழுத்ததை உணர்ந்தார். எனவே, அவர் இஸ்லாமிய நெறியைப் பயிலுவோரை அழைத்து, வரு மாறு கூறினார்: ''திருவெளிப்பாட்டினை உணர்த்தி யதற்காக அல்லாஹ்வுக்கு நன்றி செலுத்துங்கள். நீங் கள் பெற்றுள்ள இறையறிவினை சக மனிதருக்கு நீங் கள் புகட்டுவதை இறைவன் விரும்புகின்றான். வீடு வீடாகச் செல்லுங்கள். அவர்களுடைய அநுதாபத் தைப் பெறுங்கள். அல்லாஹ்வின் கட்டளையை எடுத் துக் கூறுங்கள். அவனுடைய கட்டளைகளை மீறுபவர் களுக்கு ஏற்படக்கூடிய துன்பங்களைப் பற்றி எச்ச ரிக்கை செய்யுங்கள்.''

அப்துல்லாஹ் போன்ற மார்க்க மேதைகளின் அயராத உழைப்பினாலேதான் ஆபிரிக்காக் கண்டத்தின் பல பாகங்களிலும் இஸ்லாம் பரவுவதாயிற்று.



# நிலம்

## 27

ஹக்கம் என்னும் முஸ்லிம் அரசன் ஸ்பெயின் நாட்டினை அரசாண்ட காலம். ஒரு நாள் அவர் தன்னுடைய தலைநகரைச் சுற்றி வந்த பொழுது அழகான நிலத்தைப் பார்த்தார். அதனால் கவரப் பட்ட அவர் அந்த இடத்திலே தமக்கென ஒரு மாளிகை கட்டிக்கொள்ள விரும்பினார். அந்த நிலம் ஒரு கிழவிக்குச் சொந்தமானது. அதிலே ஒரு குடிசை கட்டி அவள் வாழ்ந்து வரலானாள்.

அந்த நிலத்திற்கு நியாயமான ஒரு விலையைக் கொடுக்க அரசர் முன் வந்தார். அக்கிழவி நிலத்தை விற்க மறுத்துவிட்டாள். அரசர் இரு மடங்கு விலை யைக் கொடுக்க முற்பட்ட பொழுதுகூட அவள் நிலத்தை விற்க மறுத்துவிட்டாள்.

அரசருக்குக் கோபம் வந்தது. அந்தக் குடிசை யைப் பிடுங்கி எறிந்து, அவளை அந்த நிலத்திலிருந்து விரட்டினார். அங்கே ஓர் அரச மாளிகையையும் அழகிய பூங்காவையும் அமைப்பித்தார்.

கிழவியும் விடுவதாக இல்லை. அவள் காதியா ரிடஞ் சென்று, அரசருக்கு எதிராக முறைப்பாடு செய்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது நிகழ்ந்த சொற்ப காலத்திலே, தமது புதிய மாளிகையை வந்து பார்க்கும்படி அரசர் ஹக்கம் காதியாருக்கு அழைப்பு விடுத்தார். குறிப்பிட்ட நேரத்திற்கு, ஒரு கழுதையுடனும், சில வெறும் சாக்குகளுடனுடம் காதியார் அரண்மனை வந்து சேர்ந்தார். காதியாரின் செயல் அரசருக்கு வியப்பினை ஊட்டியது. எனவே, காரணத்தை உசாவினர்.

''இந்தச் சாக்குகளிலே அரச தோட்டத்திலிருந்து மண் வெட்டிக் கொண்டு போவதற்கு அனுமதி தாருங்கள்'' என்று காதியார் கேட்டார்.

இந்த விநோதமான கோரிக்கை அரசருக்கு வியப்பினை ஊட்டியதெனினும், அனுமதி வழங்கினர். காதியார் மண்ணை வெட்டி அந்தச் சாக்குகளை நிரப்பினர். பின்னர், அவற்றைக் கழுதையின் முதுகிலே வைப்பதற்குத் தனக்கு உதவும்படி அரசரைக் கேட்டார். இந்தக் கோரிக்கை அரசருக்கு மேலும் வியப்பினை ஊட்டிய போதிலும், மகிழ்ச்சியுடன் உதவ முன்வந்தார். எவ்வளவுதான் முயன்ற போதிலும் ஒரு சாக்கினைத்தானும் அவராலே தூக்க முடியவில்லை.

அப்பொழுது காதியார் அரசரை நோக்கி வருமாறுகூறினர்.

''அரசே! இன்று உங்களால் ஒரு சாக்கு மண்ணைத்தானும் தூக்க முடியவில்லை. கியாமத்து நாளிலே அந்தக் கிழவியிடமிருந்து நீங்கள் அநீதியாக அபகரித்த இந்தத் தோட்டம் முழுவதையும் சுமக்கும்படி அல்லாஹ் கட்டளை இடுவானாயின் என்ன செய்வீர்கள்?''

அரசர் தமது செயலுக்காக வெட்கிப்பட்டார். அந்தக் கிழவியை உடனடியாக வரவழைத்தார்.



அவள் வந்ததும், ''தாயே, நான் மிகவும் பிழை செய்துவிட்டேன். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். இன்றிலிருந்து இந்த மாளிகையும் தோட்டமும் உங்களுடையதே'' என அரசர் ஹக்கம் கூறினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பதவி

## 28

1539-ஆம் ஆண்டு ஜூன் மாதத்தில் ஷேர்க் கானுக்கும் ஹுமாயூனுக்கும் நடைபெற்ற யுத்தத்தில் ஹுமாயூன் படு தோல்வி அடைந்தார். தம்முடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக ஹுமாயூன் குதிரை ஒன்றிலே தப்பி ஓடினார்.


ஆற்றின் மறுகரையை அடைந்தால் பாதுகாப்பு. ஆனால், பாலமே முறிந்து கிடந்தது. வேறுவழியின்றிக் குதிரையுடன் ஆற்றிலே இறங்கினார். சிறிது நேரத்திலே குதிரை அவரை இடறிவிட்டுப் பிரிந்தது. அவர் நீரிலே மூழ்கிக் கொண்டிருந்தார்.

அந்தக் கட்டத்திலே தண்ணீர் சுமப்பவன் ஒருவன் அவருடைய நிலையைக் கண்டான். மூழ்கிக் கொண்டிருந்த அரசரைக் காப்பாற்றி, மறுகரையை அடைந்தான்.

அப்பொழுது அரசர் அவனுடைய பெயரைக் கேட்டார். அவன் ''நிஸாம்'' என பதிலளித்தான். ''நிஸாம் அவுலியாவின் நினைவே எனக்கு வருகின்றது'' என்று அரசன் கூறினார்.

பின்னர் அவனைப் பார்த்து, ''நான் மீண்டும் என்னுடைய அரசபதவியைப் பெற்றதும், உன்னை அரை நாளுக்கு என் சிம்மாசனத்தில் அமர அனுமதிப்பேன்.'' என்று வாக்குக் கொடுத்தார்.

சிறிது காலத்திலே ஹுமாயூன் பழைய நிலையை அடைந்தார். அப்பொழுது நிஸாம் அவர்முன் தோன்றினான். வாக்குறுதியை நிறைவேற்றும்படி கேட்டான். ஹுமாயூன் மிக்க மனமகிழ்வுடன் சிம்மாசனத்திலிருந்து இறங்கி, அதிலே நிஸாம் அமரும்படி கேட்டுக் கொண்டார். அந்தச் சிம்மாசனத்தில் அமர்ந்த அரைநாள் முழுவதும் நிஸாம் பிறப்பித்த ஒவ்வொரு கட்டளையும் நிறைவேற்றப்பட்டது. அவன் தலைநகரை விட்டுப் புறப்பட்டதும், அவனுடைய குலத்தார் சகலருக்கும் போதுமானதான செல்வங்களை ஹுமாயூன் அவனிடம் அளித்து, வழியனுப்பி வைத்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முறைமை



பதினாறும் நூற்றாண்டிலே, அநேக போத்துக்கேய மாலுமிகள் இந்து சமுத்திரத்திலே, கடற் கொள்ளையிலே ஈடுபட்டார்கள். இதன் காரணமாக அவர்கள் அடிக்கடி இந்திய வர்த்தகர்களுடனும் அராபிய வர்த்தகர்களுடனும் மோத நேரிட்டது.

மோதுதலின் விளைவாக மத உணர்ச்சிகளைப் புண்படுத்தும் கேவலமான செயல்களிலே போத்துக்கேய மாலுமிகள் ஈடுபடலாயினர். ஒரு தடவை போத்துக்கேய மாலுமிகள் திருக்குர்ஆன் பிரதி ஒன்றினை நாயின் கழுத்திலே கட்டி, அதனை முஸ்லிம் நகரம் ஒன்றின் ஊடாக விரட்டியடித்தனர்.

இதனைக் கேள்விப்பட்ட ஹமீதா பானு பேகம் மிகவுங் கோபவசப்பட்டார். அவர் தமது அன்பு மகனான அக்பர் சக்கரவர்த்தியை அழைத்து, ஒரு கழுதையின் கழுத்திலே விவிலிய நூல் ஒன்றைக் கட்டித் தூக்கி, அதனை நகரத்தின் தெருக்களிலே அடிப்பிக்கச் செய்யும்படி கூறினார்.

அக்பர் தமது தாயார்மீது மிகுந்த அன்பும் மதிப்பும் பூண்டவர். தாயாருக்கு அன்பு செலுத்தி, வருமாறு கூறினார்.

''ஒரு குற்றமும் செய்யாத ஒரு புத்தகத்தின் மீது உங்களுடைய அன்புமகன் பழி வாங்க வேண்டுமா? ஒரு தவறுக்குப் பதிலாக இழைக்கப்படும் இன்னொரு தவறு சரியாகிவிடுமா?''

★

## நேர்மை



அக்பருக்குப் பின்னர் முகலாய சாம்ராஜ்யத்தின் சக்கரவர்த்தியாக அரசுக் கட்டிலே ஏறிய ஜஹாங்கீர் பின்வருமாறு எழுதியுள்ளார்.


''காளியே ஆஸமின் மகனான மிர்ஸா நூர் கொலைக் குற்றச்சாட்டின் பேரில் என் முன்னால் நிறுத்தப்பட்டான். இவன் என்னுடைய தந்தையின் அசாதாரண அன்புக்குப் பாத்திரமாக இருந்தான். என் தந்தை அவனைத் தன்னுடைய மகன் போலவே நேசித்தார். இந்தச் சூழ்நிலையில் குற்றஞ்சாட்டப்பட்டவனைக் காதியார் ஒருவரை விசாரிக்குமாறு பணித்தேன்.

''உரிய காலத்திலே காதியாருடைய அறிக்கை ஒன்று எனக்குக் கிடைத்தது. மிர்ஸா நூர் ஒருவனை வேண்டுமென்று கொ[illegible] செய்த குற்றம் நிரூபிக்கப்பட்டு, சட்டத்தின்படி மரண தண்டனை விதிக்கப்பட்டான்.

''நான் அவனை மிகவும் நேசித்த போதிலும், அல்லாஹ்வினுடைய கட்டளையை மீற என்னால் முடியாதிருந்தது. எனவே எவ்வளவுதான் நான் அதனை மனமார விரும்பாத போதிலும், மரண தண்டனையை நிறைவேற்றுபவரிடம் அவனை ஒப்படைக்கும்படி கூறினேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''அதன் பின்னர், பல மாதங்களாக, எத்தனையோ நற்பண்புகள் வாய்ந்த, மிக இளைஞனை அவன் மரண தண்டனை அடைந்ததினால் எனக்கு ஏற்பட்ட ஆழ்ந்த துக்கத்தினை நான் என் நெஞ்சிலே சுமந்து செல்ல நேர்ந்தது.''





## கழுதை

31

உலக அதிசயங்களுள் ஒன்றாகப் போற்றப்படும் தாஜ்மஹால் என்ற அதியற்புத கட்டடத்தைத் தன் மனைவியின் நினைவாக நிறுவியவர் ஷாஜஹான் சக்கரவர்த்தியாவர். அவருடைய கலை உள்ளம் இற்றை வரை எல்லோரையும் வியப்பில் ஆழ்த்திக் கொண்டே இருக்கின்றது.

சக்கரவர்த்தி ஷாஜஹான் ஒரு சமயம் வேட்டையாடச் சென்றிருந்தார். அப்பொழுது, தம்முடன் வந்த வேட்டைக்காரரிடமிருந்து அவர் பிரிய நேரிட்டது. அவர் மிகவும் களைப்படைந்திருந்தார். தாகத்திலே தவித்தார், எனவே, அயலிற் காணப்பட்ட கிராமத்திற்குள் சென்றார். வழியாற் சென்றவர்களுக்குத் தண்ணீர் வழங்கிக் கொண்டிருந்த பிராமணன் ஒருவனைக் கண்டார். சக்கரவர்த்தி அவனை அணுகித் தமக்கும் தண்ணீர் தரும்படி கேட்டார். அவன் அவருக்குத் தண்ணீர் கொடுத்தான்.

அவர் மிகவும் அவசரப்பட்டுத் தண்ணீர் குடிப்பதைக் கண்ட பிராமணன், அவருடைய தண்ணீர்க் குவளையிலே புல்நறுக்குகள் சிலவற்றைத் தூவினான். இதன் காரணமாக சக்கரவர்த்தி தண்ணீரை மெதுவாகக் குடிக்கும் நிலை ஏற்பட்டது.

ஷாஜஹான் ஆத்திரத்துடன், ''இந்தக்குவளையிலே ஏன் புல் நறுக்குகளைப் போட்டாய்?'' எனக் கேட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''களைப்புடன் தண்ணீர் அருந்தும் என் கழுதைகளுக்கு வைக்கும் நீரிலே புல் நறுக்குகளைப் போடுவேன். மிக விரைவாக நீர் அருந்தினால் வயிற்று வலி உண்டாகும்'' என்று பிராமணன் பதிலளித்தான்.

தாகத்தைப் போக்கிய சக்கரவர்த்தி பக்கத்திலிருந்த மர நிழலிலே இளைப்பாறினார். அப்பொழுது தான் அவருடன் கூட வந்த வில்லாளிகள் அங்குவந்து சேர்ந்தார்கள். தான் கழுதையுடன் ஒப்பிட்டவர் யார் என்ற ஞான விடிவு பிராமணனுக்கு ஏற்படுவதாயிற்று. அச்சத்தின் வசப்பட்ட பிராமணன் நிலத்திலே விழுந்து, தன்னை மன்னிக்கும்படி வேண்டிக் கொண்டான்.

பிராமணனின் நோக்கம் நேர்மையானதாக இருந்ததை உணர்ந்த சக்கரவர்த்தி முறுவலித்தார். அந்தப் பிராமணனுக்குக் கிராமம் ஒன்றினை நன்கொடையாக வழங்கினார்.





# முட்டை



கிராமப் பிணக்கு ஒன்றிற்குத் தீர்ப்பு வழங்குவதற்காக மௌலவி ஹாஜ்ரபாஸ்கான் அக்கிராமத்தின் முதியவர்களுடன் அமர்ந்திருந்தார். ''எதிர்க்கட்சித் தலைவர் எங்களுடைய பேட்டுக் கோழி ஒன்றினை அறுத்துச் சமையல் செய்து விட்டார்,'' என்று ஒரு கட்சியினர் முறையிட்டனர்.

மற்றக் கட்சியினர் இந்தக் குற்றச்சாட்டை வன்மையாக எதிர்த்ததுடன், தாங்கள் தங்களுடைய சேவல் ஒன்றை அறுத்துச் சமையல் செய்திருப்பதாகச் சாதித்தனர்.

இரண்டு கட்சிக்காரரும் தங்களுடைய சாட்சிகளைக் கொண்டு வருவதிலே முனைந்தனர். அதற்கிடையிற் கான் சாஹிப் எழுந்து நின்று, ''நாங்கள் சென்று சமைத்த இறைச்சியைப் பார்வையிடுவோம். சேவலின் இறைச்சியும், பேட்டின் இறைச்சியும் ஒரே மாதிரி இருப்பதில்லை,'' என்றார்.

அவர்கள் கறி சமைக்கப்பட்ட இடத்திற்கு வந்தார்கள். கான் சாஹிப் கறிச்சட்டியின் மூடியை அகற்றி, அகப்பைக் காம்பினால் இறைச்சியைக் கிளறிப் பார்க்கத் தொடங்கினார். என்ன, ஆச்சரியம்? முட்டைக் கருக்களைக் கொண்ட குலை ஒன்று இறைச்சித் துண்டுகளுக்கிடையிற் காணப்பட்டது!

காண்சாஹிப் நிமிர்ந்து முறுவலித்தவாறே சூழ நின்றவர்களைப் பார்த்து, ''இன்று ஒரு நன்னாளாகும். இல்லாவிட்டால் சேவலின் முட்டைகளைப் பார்க்கும் அதிர்ஷ்டம் எங்களுக்குக் கிட்டி இருக்குமா?'' என்று கூறினார்.

அந்தக் குடிசையிலே சிரிப்பு முத்துக்கள் மீண்டும் மீண்டும் குவியலாயின.

பின்னர் கான் சாஹிப் அமைதியடைந்து, குற்றஞ் சாட்டப்பட்டவரைக் குறிப்பாகப் பார்த்து, ''பெரியவரே, உங்களுடைய முது நரை கண்ட தலைக்கு நாங்கள் மதிப்பளித்து, நீர் உண்மையிலே ஒரு சேவலைத்தான் அறுத்தீர் என்பதை நாம் நம்ப வேண்டி இருக்கின்றது. ஆனால், இப்படி முட்டையிடும் அதியற்புத சேவலை எங்களுடைய அனுமதியின்றி ஏன் அறுத்தீர்கள்?'' என்று கேட்டார்.

கிழவன் உண்மையைக் கூறி, அவர்களிடம் மன்னிப்புக் கோரியதுடன், பேட்டின் சொந்தக்காரருக்கு உரிய நஷ்டஈடு வழங்கினான்.





# புகழ்ச்சி

33

பைஸாந்திய சாம்ராஜ்யத்தின் தலைநகரான கொன்ஸ்தாந்திநோபிள் 1453-இல் முஸ்லிம் படைகளிடம் வீழ்ச்சியடைந்தது. மன்னரான இரண்டாம் முஹம்மது கொன்ஸ்தாந்திநோபிளின் அரசனைக் கைது செய்யவோ, அன்றேல் அவன் பிணத்தைக் கண்டுபிடிக்கவோ உத்தரவிட்டார். பிரேதக் குவியல்களின் கீழே மன்னனுடைய பிரேதம் கண்டெடுக்கப்பட்டது. அந்தப் பிரேதத்தை உரிய கௌரவமளித்து அடக்கஞ் செய்யும்படி கட்டளை இட்டார்.

அந்த சாம்ராஜ்யத்தின் மாமந்திரியாக விளங்கியவர் லூக்காஸ் நோராறஸ். அவன் முஹம்மது சுல்தானுக்கு முன்பாகக் கொண்டு வரப்பட்டபொழுது அவன் தன்னுடைய சொத்துக்கள் முழுவதையும் சுல்தானின் காலடிகளிலே வைத்தான்.

சீற்றங்கொண்ட சுல்தான், ''உங்களுடைய அரசனையும், உங்களுடைய நாட்டையும் காப்பாற்றுவதற்காக ஏன் நீர் இந்தத் திரவியம் அனைத்தையும் செலவு செய்யவில்லை?'' என்று கேட்டார்.

''இவை உங்களுடையவை. உங்களுக்காகவே ஆண்டவன் அவற்றை ஒதுக்கி வைத்தான்,'' என்று முகப் புகழ்ச்சி செய்தான்.


''இதை எனக்காகவே இறைவன் ஒதுக்கி வைத்தான் என்றால், பயனற்ற எதிர்ப்பின் மூலம் அவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னிடமிருந்து தடுத்து நிறுத்தி வைக்க உங்களுக்கு அவ்வளவு துணிச்சல் இருந்ததா?'' என்று சுல்தான் கர்ஜித்தார்.

ஹூக்காஸ் ஏதேதோ காரணங்களை முணுமுணுக்கத் தொடங்கினான்.

அப்பொழுது சுல்தான் அவனை அவமதிப்புடன் நோக்கி, ''என்றாலும் உன்னை மன்னிக்கின்றேன்,'' என்றார்.







## 34

முதலாவது உலக மகாயுத்தத்தின்போது துருக்கி ஜேர்மனியுடன் சேர்ந்து கொண்டது. இந்தச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, இளம் அராபிய இயக்கம் வலிமை பெறுவதாயிற்று. ஷரீப் ஹுஸைன் தேவைப்பட்ட ஆயுதங்களையும், படைத்தளவாடங்களையும் சேகரித்தார். இறுதியில், துருக்கிய மேலாதிக்கத்தை எதிர்த்து, அராபிய விடுதலையைப் பிரகடனப்படுத்தினார். இந்த நடவடிக்கைக்குப் பிரித்தானியர் அநுசரணையாக இருந்தனர்.

இந்த வகையிலே கர்னல் லோறன்ஸ் என்பவர் அராபியர்களுக்குத் தோன்றாத் துணையாக அமைந்தார். ஷரீப் ஹுஸைன், அமீர் பைஸல் ஆகிய தலைவர்களுக்குப் பின்னாலே நின்று, சக்திமிக்க சூத்திரதாரியாக இயங்கினார். அவர் ஒரு மர்ம மனிதராகப் பாராட்டப்பட்டார். தம்மிடையே சண்டை பிடித்த பல்வேறு அராபிய குலங்களையும், துருக்கியருக்கு எதிரான போரிலே ஒன்றிணைத்த பெருமையும் அவரையே சாரும். எனவே துருக்கிய அரசாங்கம் அவர்மீது விரோதம் பாராட்டுதல் தவிர்க்க முடியாததாக அமைந்தது. லோறன்ஸை கைது செய்ய உதவுபவர்களுக்கு ஏழரை இலட்சம் ரூபாய் சன்மானம் அளிக்கத் துருக்கிய அரசாங்கம் முன்வந்தது.

ஒரு நாள் மாறுவேடம் புனைந்துகொண்டு துருக்கியப் படை வரிசையைப் பார்வையிடச் சென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றார். அவர் பனூஸாகர் பகுதியிலே தங்க நேர்ந்தது. இங்கே வாழ்ந்த கோத்திரத்தார் துருக்கிய எஜமானர்களுக்கு விசுவாசமானவர்களாகக் காணப்பட்டார்கள். அந்தக் கோத்திரத்தாரின் ஷேக்கினைச் சந்தித்து நட்புப் பாராட்டினார். ஷேக்கின் விருந்தினராக லோறன்ஸ் தங்கியிருந்தார்.

துருக்கியர் அளிப்பதாக அறிவித்த கொழுத்த சன்மானத்தைப் பெறும் ஆசைக்கு ஷேக் மசிந்தார். இதனால் விரைதூதர் ஒருவரைத் துருக்கியரிடம் அனுப்பி வைத்தார். இதனை மோப்பம் பிடித்த லோறன்ஸ் தப்பியோடினார்.

விருந்தினர் ஒருவரைக் காட்டிக்கொடுப்பது இஸ்லாத்திற்கு முரணானது. பனூஸாகர் கோத்திரத்தார் அவமான உணர்வு பெற்றார்கள். அவர்கள் ஒன்றுகூடி, நஞ்சிட்ட கோப்பியை அருந்துமாறு தங்களுடைய ஷேக்கினை நிர்ப்பந்தித்தார்கள்.







# 35

பாரசீகச் சக்கரவர்த்தியான இப்றாஹீம் அத்ஹம் ஒருநாள் வேட்டையாடுவதற்காக அயலிலுள்ள காடு ஒன்றுக்குச் சென்றிருந்தார். அப்பொழுது ஓர் அடிமைப் பெண் அவருடைய படுக்கை அறைக்குள் வந்தாள். சக்கரவர்த்தியின் பேகம் அங்கு இருக்கவில்லை, அழகிய வேலைப்பாடுகள் உடைய கட்டில். மெதுமையான பஞ்சணை. அத்தரின் நறுமணம். இவை அனைத்தும் ஓர் இனிய சூழ்நிலையை உருவாக்கி அவளை மயக்கின. அவள் ஆசையின் வசப்பட்டாள். மெதுவாக அந்த அரச கட்டிலிலே ஏறிப் படுத்துப் பார்த்தாள். சீக்கிரமே அவள் நித்திரையாகி விட்டாள்.

அவள் அவ்வாறு சக்கரவர்த்தியின் கட்டிலிலே துயின்றதைக் கண்டு பிடித்து விட்டார்கள். வேட்டையிலிருந்து சக்கரவர்த்தி இப்றாஹீம் அத்ஹம் திரும்பியதும் இந்த விடயம் அவருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இதனால் கோபாவேசம் அடைந்த சக்கரவர்த்தி அந்த அடிமைப் பெண்ணுக்கு உடனேயே ஐம்பது சவுக்கடி கொடுக்கும்படி கட்டளையிட்டார். அவருடைய கட்டளை நிறைவேற்றப்பட்டது.

அதன் பின்னர் அந்தப் பெண்ணைப் பார்த்து, "துஷ்டப் பெண்ணே! இப்பொழுதாவது நீ செய்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தவறுக்காக வருந்துகின்றீயா?'' என்று சக்கரவர்த்தி இப்ருஹீம் பின்அத்ஹம் கேட்டார்.

''ஆம், அரசே! ஆனால், உங்களை நினைத்துத் தான் நான் அதிகம் வருத்தப்படுகின்றேன்'', என்று அடிமைப் பெண் கூறினாள்.

''ஏன் அப்படி?'' எனச் சக்கரவர்த்தி கர்ஜனை செய்தார்.

''அந்தக் கட்டிலிலே ஒரு மணி நேரம் தூங்கிய தற்காக இதுதான் தண்டனை என்றால், பல்லாண்டு களாக அதிலே படுத்துறங்கும் உங்களுக்கு எத்தகைய தண்டனை வழங்கப்படும் என்பதை நினைத்துப் பார்க்கவே எனக்குப் பயமாக இருக்கின்றது,'' என்று அடிமைப் பெண் கூறினாள்.

அந்தப் பெண்ணுடைய இந்த வார்த்தைகள் அவர் தலைமீது திடீர் என்று இடியேறு ஒன்று விழுந்ததைப் போன்ற அவதியை ஏற்படுத்தியது. சக்கரவர்த்தி ஸ்தம்பித்துப் போனார். அவருடைய முகம் வெளிறியது. அவர் குரல் நடுங்கத் தொடங் கியது. ''இந்தப் பெண்ணை அழைத்துச் சென்று நல்லபடியாக நடத்துங்கள். யோசிப்பதற்காக என் னைத் தனிமையில் விடுங்கள்,'' என்று கூறினார்.



பிரயாணி

36

I

[சக்கரவர்த்தி இப்ருஹீம் அத்ஹம் அவர்களுடைய தலைநகரான பல்குநகர். அன்று பாரசீகருடைய புது வருடப் பண்டிகை. பாரசீகப் பண்டிகை நௌரோஜ் என வழங்கும். அதனைக் கோலாகலமாகக் கொண்டாட கோநகரம் விழாக் கோலம் புனைகின்றது. சக்கரவர்த் தியின் அரண்மனை.]

சக்கரவர்த்தி: தலைநகரம் கோலாகலமாக அலங்கரிக்கப் பட்டுள்ளதா?

முதற் பிரதானி: ஷா இன் ஷா, உங்களுடைய ஊழியர் கள் எல்லாவற்றையுஞ் சிறப்பாகச் செய்துள் ளார்கள்.

இரண்டாம் பிரதானி: ஒவ்வொரு வீட்டின் கூரை யிலும் கொடிகள் பறக்கின்றன. ஒவ்வொரு வாசலிலும் இசைநிகழ்ச்சிகள் ஒழுங்கு செய்யப் பட்டுள்ளன.

மூன்றாம் பிரதானி: ஒவ்வொரு கதவிலும் மாலைகள் தொங்குகின்றன. மங்கல விளக்குகள் ஒவ் வொரு தெருவையும் அலங்கரிக்கின்றன.

சக்: எல்லாஞ் சரி. இப்பொழுது கொண்டாட்டம் ஆரம்பமாகட்டும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(அப்பொழுது அங்கே பிரயாணி ஒருவன் தோன்றுகின்றான்.)

பிரயாணி: இந்த விடுதிச்சாலையின் சொந்தக்காரன் எங்கே? இன்றிரவு நான் இங்கேயே தங்கத் தீர்மானித்துள்ளேன்.

முத: இந்த அசிங்கமான பிரயாணியை இங்கே வர எந்த முட்டாள் காவலாளி அனுமதித்தான்?

இர: நண்பரே, இவன் ஒரு பிரயாணியல்ல. இவன் ஒரு பைத்தியக்காரனாகத்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால், இந்த அரண்மனையை ஒரு விடுதிச் சாலை என்று நினைப்பானா?

பிர: இருக்கட்டும். இந்த விடுதிச்சாலையின் சொந்தக்காரன் யார்?

மூன்: இவனைப் பைத்தியக்கார விடுதிக்குத்தான் அனுப்பி வைக்க வேண்டும்.

சக்: நண்பர்களே இன்று புதுவருடக் கொண்டாட்டம் என்பதை மறந்துவிடாதீர்கள். அவனைப் பைத்தியக்கார விடுதிக்கு அனுப்பாமல், அவன் செய்யும் வேடிக்கையைப் பார்த்துக் களிப்போம்.

முத: ஷா இன் ஷா கூறுவதுஞ் சரியே.

இர: இதனைப் பார்க்கிலும் சிறந்த ஒரு தீர்மானம் இருக்க முடியாது.

மூன்: மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ளத் தக்க முடிவு.



சக்: சகோதரா, நீ உன் கண்ணாடியைத் துலைத்து விட்டாயா? நன்றாகப் பார்க்கக் கூடியதாக ஒரு கண்ணாடி வாங்கித் தரட்டுமா?

பிர: ஷா இன் ஷாதான் தமது கண்ணாடியைத் துலைத்து விட்டதாக எனக்குத் தோன்றுகின்றது.

முத: இவனுடைய துடுக்குத்தனம் தாங்க முடியாததாக இருக்கின்றது.

இர: அத்துமீறிப் பேசும் இவனுடைய வாயைத் தைக்க வேண்டும்.

மூன்: இவனுக்கு உடனேயே மரண தண்டனை விதிக்கப்படல் வேண்டும்.

சக்: இல்லை, நண்பர்களே, இல்லை. இந்த மனிதனுக்கு எத்தகைய தீங்கும் இழைக்கப்படலாகாது. இன்று நாம் புதுவருடக் கொண்டாட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் என்பதை மறந்துவிடலாகாது. இன்று பாதுஷாவும் பக்கீரும் சமன். எனவே, அவன் பூரண சுதந்திரம் அநுபவிக்கட்டும்.

முத: அது சரி; அது சரி.

இர: அதிலே எவ்வித சந்தேகமும் இல்லை.

மூன்: அவன் விரும்பிய எதனையும் செய்யட்டும்.

சக்: நண்பனே, நீ உன் கண்ணாடியைத் துலைக்கவில்லை என்று சொல்லுகின்றாய். ஆனால், இந்த மாளிகையை ஒரு விடுதிச்சாலை என்று எவ்வாறு அழைக்கலாம்?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிர: இந்த மாளிகை ஒரு விடுதிச் சாலையே என்று ஆயிரம் தரம் கூறுவேன். ஷா இன் ஷா, நான் உங்களிடம் சில கேள்விகள் கேட்கலாமா?

சக்: ஆம். மிகத் தாராளமாக.

பிர: உங்களுக்கு முன்னர் இந்த வீட்டிலே வசித்தது யார்?

சக்: ஏன்? என் தந்தை.

பிர: அவருக்கு முன்னர்?

சக்: என் தந்தையின் தந்தை.

பிர: அவருக்கு முன்னர்?

சக்: என் தந்தையின் பாட்டனார். அவருக்கு முன்னர் என் கொள்ளுப்பாட்டனார். அப்படியே தொடரும். ஆனால், எந்தக் காலமும் இந்த அரண்மனை விடுதிச் சாலையாக இருந்ததில்லை.

பிர: இப்பொழுது அவர்கள் எல்லாம் எங்கே?

சக்: அவர்கள் போய்விட்டார்கள்.

பிர: நீங்கள்?

சக்: நானும் சில காலத்திலே போய்விடுவேன்.

பிர: எனவே, ஒரு மனிதனைத் தொடர்ந்து இன்னொரு மனிதன் இந்த வீட்டிற்கு வந்து சிறிது



காலம் தங்கி விட்டுப் போய்விட்டார்கள். ஆனாலும், சக்கரவர்த்தியே, தற்பெருமை உங்களுடைய கண்களை மறைத்துள்ளபடியால், இதனை ஒரு விடுதிச் சாலையாக உங்களாற் பார்க்க முடியவில்லை.

(பிரயாணி செல்லல்)

சக்: (தலையைக் கவிழ்த்து, மௌனமாகச் சிறிது நேரம் யோசித்துவிட்டு) பிரயாணியே!...... எங்கே, அத்தப் பிரயாணி?

முத: ஷா இன் ஷா, அந்தப் பிரயாணி போய் விட்டான்.

சக்: அந்தப் பிரயாணியை அழைத்துக் கொண்டு வாருங்கள்.

காவலாளி: உத்தரவு.

(காவலாளி செல்லல்)

மூன்: ஷா இன் ஷா! சர்பத் தயாராக இருக்கின்றது. அடிமைகள் காத்து நிற்கின்றார்கள். வரச் சொல்லட்டுமா?

சக்: கொஞ்சம் பொறுங்கள்.

முத: மன்னர் மன்னா, தங்களுடைய உத்தரவுக்காக இசைவாணர்கள் காத்திருக்கின்றார்கள்.

சக்: அதற்கு இப்பொழுது அவசரமில்லை. பொறுத்திருக்க முடியாவிட்டால், அவர்கள் போகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(காவலாளி வரல்)

காவ: ஷா இன் ஷா! அந்தப் பிரயாணியை எங்குமே பார்க்க முடியவில்லை.

சக்: எங்கேயுமே காண முடியவில்லையா? சரி. (நீண்ட பெருமூச்செறிந்து) நண்பர்களே! அலங்கார விளக்குகள் எல்லாவற்றையும் அணையுங்கள்; அவை என் பார்வையை உறுத்துகின்றன. மலர்களையும் மாலைகளையும் எறியுங்கள்; அவை நாறுகின்றன. இசையை நிறுத்துங்கள்; அது என் செவிகளைத் துளைக்கின்றன. புது வருடக் கேளிக்கைகள் உடனடியாக, இப்பொழுதே நிறுத்தப்படட்டும்.

## II

[அரண்மனை. நடுநிசி. சக்கரவர்த்தி தனிமையான அறையில் பிரார்த்தனையிலே ஈடுபட்டிருக்கின்றார்.]

சக்: (ஆகாயத்திலே கைகளை உயர்த்தியவாறு) அருளிரக்கமுடைய அல்லாஹ்! என் பாவங்களை மன்னியும்! உன் கிருபையைத் தாரும்! என்னுடைய தற்பெருமை செருக்குக் குலைந்துவிட்டது. உன்னை நான் அடைவதற்கான சரியான வழியைக் காட்டு, இறைவா!

(கூரையின் மேலே சத்தம் கேட்கின்றது)

சக்: அது யார்? என்னைக் குழப்புவது யார்?

ஒரு குரல்: நண்பர்களே! நான் என் ஒட்டகத்தைத் தொலைத்து விட்டேன். அதனைத்தான் இங்கே தேடுகின்றேன்.



சக்: ஆனால், அரண்மனையின் கூரையிலே காணமற் போன ஒட்டகத்தைத் தேடுவது எவ்வளவு முட்டாள்த்தனமானது?

குரல்: புத்தியில்லாத சக்கரவர்த்தியே! உன்னுடைய அரண்மனையின் ஆடம்பரங்களுக்கும் சுகபோகங்களுக்கும் மத்தியிலே, நீ அல்லாஹ்வை அடைய முடியுமானால், என் ஒட்டகத்தை நான் ஏன் இந்த அரண்மனையின் கூரையிலே பெற முடியாது?

சக்: ஓ......

## III

(அரண்மனைக்கு முன்னால் உள்ள வீதி)

சக்கரவர்த்தி: (கந்தல் அணிந்து) நண்பர்களே, சென்று வருகின்றேன்.

பிரதானிகள்: (அழுதவாறு) ஷா இன் ஷா! எங்களை எல்லாம் விட்டுப் பிரிந்து எங்கே செல்லுகின்றீர்கள்?

சக்கரவர்த்தி: நண்பர்களே, நான் இனி ஷா இன் ஷா அல்ல, என்னை ஒரு பிரயாணி என்றே அழையுங்கள். நான் இந்த இடத்திற்குச் சிறிது காலத்திற்கே வந்தேன். திரும்பிப் போவதைப் பற்றி மறந்து போனேன். திரும்பிப் போகும் பொழுது என்னுடன் எதை எடுத்துச் செல்லலாம் என்பதை அறிவதற்காகப் புறம்பட்டு விட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பங்கு

## 37

"நான் முஸ்லிமாக இருப்பதினால் நான் உங்களுடைய சகோதரன். எனவே, உங்களுடைய சொத்துக்களிலே என் பங்கினைத் தாருங்கள்," என்று கேட்டு, குராஸான் சுல்தான் தாகிஷுக்கு ஒருவன் நிருபம் அனுப்பினான்.

அவனுக்கு, பத்துத் தங்க தினார்கள் அன்பளிப்புச் செய்யுமாறு சுல்தான் கட்டளையிட்டார்.

அந்தப் பரிசு அவனுக்குக் கிடைத்தது. "நான் உங்கள் சகோதரன். நீங்கள் அளவற்ற செல்வத்தை வைத்திருக்கின்றீர்கள். அப்படி இருந்தும் எனக்குப் பத்துத் தினார்களுக்கு அதிகமாகத் தர முடியாதா?" என அவன் மீண்டும் கடிதம் எழுதினான்.

"என்னுடைய மற்றைய சகோதரர்களும் உன்னைப் போல தங்களுடைய பங்கினைத் தருமாறு கேட்டிருப்பார்களேயானால், அந்தப் பத்துத் தினார்கள் கூட உனக்குக் கிடைத்திருக்காது," என்று சுல்தான் பதில் அனுப்பி வைத்தார்.

## தானம்

## 38

பைரோஸ் ஷா பிறப்பால் ஓர் அபிஸீனியன் ஆவர். அதி தீவீரச் செயல்களைச் சாதித்துப் பலரது பாராட்டுதல்களையும் பெற்றார். இதனால் அவர் வங்காள தேசத்தின் சுல்தானாக உயர்ந்தார்.

அவர் சுல்தானாகிய பிறகு அவருடைய புகழ் வேறு வகையிலும் பிரபலமடையலாயிற்று. அவர் ஏழைப் பிரஜைகளுடன் மிகுந்த தாராள மனப்பான்மையுடன் நடந்துகொள்ளலானார். அவருக்கு முன்னர் வாழ்ந்த சுல்தான்கள் மிகுந்த பாடுபட்டுச் சேமித்து வைத்திருந்த ஏராளமான சொத்துக்களை ஏழைகளின் மத்தியிலே தாராளமாகப் பங்கிடலானார்.

ஒரு சமயம், பைரோஸ் ஷா ஏழைகளுக்கு ஒரு இலட்சம் ரூபாய்களை விநியோகிக்கும்படி கட்டளை இட்டார்.

அவருடைய மந்திரி பிரதானிகள் இந்தத் தாராளப் போக்கினை வெறுத்தார்கள்.

"இந்த அபிஸீனியன் தற்செயலாகவே இந்தப் பெருஞ் செல்வங்களுக்கு அதிபதியாகியிருக்கின்றான். இவன் இவற்றைச் சேர்க்க அரும்பாடுகள் பட்டிருந்தாலல்லவோ இதன் மதிப்புகள் தெரியும்? பணத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின் அருமையை இவன் உணரச் செய்வதற்கு ஓர் உபாயத்தினைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று தங்களுக்கிடையில் பேசிக் கொண்டார்கள்.

மந்திரிப் பிரதானிகள் விநியோகிக்கப்பட வேண்டிய செல்வத்தை நிலத்திலே பரப்பி வைத்தார்கள். இதனைச் சுல்தான் பார்த்தால், அதனாலே கவரப்பட்டு, தன்னுடைய தாராளப் போக்கினை மாற்றிக் கொள்ளக்கூடும் என அவர்கள் நினைத்தார்கள்.

நிலத்திலே பரப்பப்பட்டிருந்த செல்வத்தைப் பார்த்ததும், ''ஏன் இந்தச் செல்வம் இங்கே கிடக்கின்றது?'' என்று சுல்தான் கேட்டார்.

''ஏழைகளுக்கிடையிலே விநியோகிக்கும்படி தாங்கள் கூறிய செல்வமே இது,'' என்று மந்திரிப் பிரதானிகள் கூறினார்கள்.

''அப்படியா? இது எவ்வாறு போதும்? இது தானத்திற்கு மிகக் குறைந்த தொகையாகும். இதனுடன் இன்னொரு இலட்சம் ரூபாயைச் சேர்த்து விநியோகியுங்கள்,'' என்று சுல்தான் மறுமொழி கூறினார்.





## 39

இரண்டாவது இராஜசிங்கன் கி. பி. 1635 ஆண்டு தொடக்கம் கி. பி. 1687 ஆம் ஆண்டு வரை கண்டி நாட்டின் மன்னனாகத் திகழ்ந்தான்.

ஒரு தடவை ஊவாப் பகுதியில் இரண்டாவது இராஜசிங்கனுக்கும் போத்துக்கேயருக்கு மிடையிலே சண்டை நடைபெற்றது. அந்தச் சண்டையிலே இராஜசிங்கன் தோற்றான்.

தன் உயிரைக் காப்பாற்றுவதற்காகச் சமர்க் களத்திலிருந்து ஓடினான். அவ்வாறு தப்பி ஓடுகையில் 'பங்கரகம்மன' என்ற கிராமத்தை அடைந்தான். அங்கு உள்ளே போறையுடைய ஒரு பலா மரம் நின்றது. அது மாட்டுப்பட்டியின் அயலிலே நின்றது. அந்த மாட்டுப்பட்டியில் ஒரு முஸ்லிம் பெண், பால் கறந்து கொண்டிருந்தாள். இரண்டாவது இராஜசிங்க மன்னன் அந்தப் போறைக்குள் நுழைந்து மறைந்து கொள்வதைக் கண்டாள்.

அவனைத் துரத்தி வந்த போத்துக்கேயப் போர் வீரர்கள் மாட்டுப்பட்டிக்குக் கிட்ட வந்த இராஜசிங்கன் எவ்வாறு திடீரென மறைந்தான் என்பதை நினைத்து ஆச்சரியப்பட்டார்கள். பால் கறந்துகொண்டிருந்த முஸ்லிம் பெண்ணைப் போத்துக்கேயப் போர் வீரர்கள் கேட்டுப் பார்த்தார்கள், அவள் மன்னன் மறைந்து விட்டதைக் காட்டிக் கொடுக்க விரும்பவில்லை. அவள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனம் சாதித்தாள். இதனால் ஆத்திரமடைந்த போத்துக்கேய வீரர்கள் அந்த முஸ்லிம் மாது சிரோமணியைக் கண்டதுண்டமாக வெட்டி எறிந்தார்கள்.

இரண்டாவது இராஜசிங்க மன்னன் உயிர் தப்பி, அரண்மனையை அடைந்த பின்னரே, அந்த முஸ்லிம் பெண்ணுக்கு ஏற்பட்ட அவலக் கதியைப் பற்றிக் கேள்விப்பட்டான். மன்னனின் உயிரைக் காக்கத் தன் உயிரையே பலிகொடுத்த அந்தப் பெண்ணுக்கு நேர்ந்த அவலக் கதியை நினைந்து மனம் வருந்தினான்.

அவளுடைய ஞாபகார்த்தமாக 'பங்கர கம்மன' என்ற கிராமத்தில் வாழ்ந்த முஸ்லிம்களுக்கு அநேக காணி பூமிகளை இராஜசிங்க மன்னன் நன்கொடையாக வழங்கினான்.






முற்றும்

## 40

லாகூரிலே ஓர் இலக்கியச் சங்கம் இயங்கி வந்தது. அதன் அங்கத்தவர்கள் 'சத்தியத்தின் குரல்' என்ற பத்திரிகையை விரும்பிப் படிக்கும் இயல்பினர். அவர்கள் அவ்வளவு தூரத்திற்கு அப் பத்திரிகையின் ஆசிரியருடைய எழுத்து வன்மையிலே மனம் பறி கொடுத்திருந்தார்கள். மேற்படி ஆசிரியரை நேரிலே பார்த்து அளவளாவும் ஆசை அவர்கள் மனத்திலே திரண்டது. எனவே, தமது சங்கத்தின் ஆண்டு விழாவிற்கு அந்த ஆசிரியரையே சிறப்புச் சொற்பொழிவாளராக அழைப்பது என்று முடிவு செய்தார்கள்.

லாகூர் இலக்கியச் சங்கத்தின் அழைப்பினை 'சத்தியத்தின் குரல்' ஆசிரியர் மன உவப்புடன் ஏற்றுக் கொண்டார்.


கூட்டம் பிரமாண்டமானதாக இருந்தது. அக் கூட்டத்துக்கு இஸ்லாமிய மார்க்க ஞானிகளும், இலக்கிய அறிஞர்களும் ஏராளமாக வந்திருந்தார்கள். கவிஞர் ஹாலி, கவிஞர் இக்பால், உருது எழுத்தாளர் நஜீர் அஹ்மது போன்றோர் முன்வரிசையில் இருந்தனர்.

பதினாறு வயதுகூட ஆகாத பையன் 'சத்தியத்தின் குரல்' ஆசிரியன் என்ற முறையிலே பேச எழுந்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ததும் கூட்டத்தினர் திகைத்தனர். பண்டிதர்களும் அறிஞர்களும் அலட்சியமாக முறுவலித்தார்கள். இவற்றைச் சட்டை செய்யாது, அந்த இளைஞன், 'மதத்தின் அடிப்படையான பகுத்தறிவு' என்ற பொருள் பற்றி ஆழமான சொற்பொழிவு ஒன்றினை நிகழ்த்தினான். அந்தப் பேச்சினைக் கேட்ட அனைவரும் வியந்து, அவனைப் பாராட்டினார்கள். ''இளந் தோள்களிலே முதிர்ந்த தலை'' என்று கவிஞர் அல்தாப் ஹுசேன் ஹாலி அவர்களே புகழ்ந்து கூறினார்கள்.

அந்த இளைஞனே இந்திய முஸ்லிம் தேசிய எழுச்சியின் விடுதலை வீரராகத் திகழ்ந்த மௌலானா அபுல் கலாம் ஆஸாத் ஆவர். இளமைப் பருவத்திலேயே மார்க்க ஞானத்திற் புலமைமிக்க மௌலானா ஆஸாத், பிற்காலத்தில் 'இளம்பிறை' எனும் இதழ் நடத்தி, இந்திய முஸ்லிம்களுக்கு விடுதலை வேட்கையை ஊட்டினார். தர்ஜுமா-அல்-குர்ஆன் என்னும் அற்புதமான குர்ஆன் விளக்கவுரை ஒன்றினை இயற்றியுள்ளார். குர்ஆனின் தோற்றுவாய் அத்தியாயமான சூரத்துல் பாத்திஹா பற்றிய தமது வியாக்கியானத்தில் மிகக் கூடுதலான முக்கியத்துவத்தை ஆஸாத் அளித்தார். அதிலே இடம் பெறும் சுருக்கமான ஏழு வாக்கியங்களின் வியாக்கியானங்கள் குர்ஆன் முழுவதிலுமுள்ள மன உருவங்களை விரிவாகக் கொண்டுள்ளன. திருக்குர்ஆனின் சீர்த்திக்குமௌலானாவின் தர்ஜுமா அல் குர்ஆன் கணிசமான பங்களிப்பாக முற்றியது.



...தொடரும்

கருணைப் பெருங் கடலே!
குறுகிய கால எல்லையுள்
இஸ்லாமியப் பூங்காவிலே
இன்மணம் பரப்பும்
பூக்களைக்
கொய்யவும் தொடுக்கவும்
வைக்கவுஞ் செய்தாய்.
நீயே தந்துள்ள
சிறிய அறிவினையும்
அற்ப ஆற்றலையும்
துணைபற்றிய அறுவடையை
துணையே நீயே அறிவாய்.
ஆராய்ந்து பார்க்கவும்
அறிந்து தெளியவும்
மேலும் ஆற்றலைத் தந்து
இப்பணியினைத் தொடர
இறையே, கொடையே,
இரங்கு
வழிகாட்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org